
# இந்த ரோஜாவுக்கு நிறமில்லை



ராஜேஷ்குமா

## 1

'பீச் சிட்டி மெட்ராஸ் ரோட்டரி க்ளப் உங்களை மகிழ்வோடு வரவேற்கிறது' என்ற ஜிகினா வாக்கியத்தோடு நீலநிற பேனர் துணி காற்றில் ஆடிக் கொண்டிருக்க - வண்ண சலபன் பேப்பர் தோரணங்கள் சலசலத்தன. பந்தல் கம்பங்களில் சதுர ஸ்பீக்கர்கள் டி.வி. மானிட்டர்களோடு தெரிந்தன.

பணக்கார முகங்கள் ஹால் பூராவும் வரிசையாய் போடப்பட்டிருந்த ஃபோல்டிங் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள். ரோட்டரி க்ளப்பின் கல்ச்சுரல் மீட். மேடையில் சிவப்பு ரெக்ஸினால் போர்த்தப்பட்ட குஷன் நாற்காலிக்ளில் வி.ஐ.பி.க்கள் தெரிய அவர்களில் நடுநாயகமாக ஒரு நட்சத்திரம் போல் ஜொலித்தாள் ப்ரதீபா. அழகான - அதே சமயம் இறுக்கமான முகவெட்டு.

மைக்கின் முன்னால் நின்றிருந்த ரோட்டரி க்ளப் ப்ரஸிடெண்ட் நிதானமான குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

''கண்டிப்புக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரியான ப்ரதீபாவுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கவே இந்த 'கல்ச்சுரல் மீட்'டைக் கூட்டியிருக்கிறோம். போலீஸ் துறைக்கு பெண்கள் பொருத்த மானவர்கள் அல்ல என்ற ஒரு கருத்து இன்னமும் நம் சமூகத்தில் இருக்கிறது. அந்தக் கருத்தை முறியடிக்கும் வகையில் திருமதி ப்ரதீபா அவர்கள் போலீஸ் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். 'காவல் துறை' என்பது மக்களை தீய

சக்திகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட துறை. அந்தத் துறையில் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் உழைக்கக் கூடியவர்கள் வெகு குறைவு. அந்தக் குறைந்த பேரிலும் மக்களுக்கு நிறைவான சேவைகளை செய்து வருபவர் திருமதி ப்ரதீபா அவர்கள். அவர்களுடைய இந்தச் சேவையைப் பாராட்டி - பெண் குலத்தில் உதாரண மங்கையாய் விளங்கும் திருமதி ப்ரதீபா அவர்களுக்கு நம் ரோட்டரி சங்கம் சார்பாக 'காக்கி ரோஜா' என்ற பட்டத்தை அளிப்பதில் பெருமை கொள்கிறோம்.''

விழா ஹால் கைத்தட்டலில் அதிர்ந்தது.

கைத்தட்டல் ஓயும் வரை காத்திருந்த ப்ரஸிடெண்ட், விட்ட இடத்திலிருந்து பேச்சைத் தொடர்ந்தார்.

''கண்டிப்பான ஒரு போலீஸ் அதிகாரிக்கு மென்மையாய் 'காக்கி ரோஜா' என்ற பட்டத்தை வழங்கியிருப்பது உங்களுக்கெல்லாம் வியப்பைத் தரலாம். கடுமையான காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கும் ப்ரதீபா அவர்களுக்கு இந்தக் 'காக்கி ரோஜா' பட்டம் எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம். ரோஜா என்றாலே அதனுடன் முள்ளும் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ப்ரதீபா என்கிற ரோஜாவுக்கு முள்ளாக காக்கி யூனிஃபார்ம் இருக்கிறது. இவர் நல்லவர்களுக்கு ஒரு ரோஜாவைப் போல் மென்மையானவர். அதே சமயம் சட்டத்தை மீற முயலும் தீய சக்திகளுக்கு முள்ளாய்க்குத்தும் கண்டிப்பான போலீஸ் அதிகாரி. எனவேதான் ப்ரதீபா அவர்களுக்கு 'காக்கி ரோஜா' என்கிற பட்டத்தை வழங்குவதில் இந்தக் கல்ச்சுரல் மீட் பெருமை



கொள்கிறது.''

மறுபடியும் விழா ஹால் கைத்தட்டலால் அதிர, நகரமேயர் எழுந்து தங்க வண்ணத்தில் பளபளக்கும் பெரிய ஷீல்டு ஒன்றைக் கொடுக்க - அவள் எழுந்து புன்னகையோடு பெற்றுக் கொண்டாள்.

''இப்போது ப்ரதீபா அவர்கள் பேசுவார்கள்.''

ப்ரதீபா மைக்குக்கு முன்பாய் வந்து நின்று பேச ஆரம்பித்தாள்.

''நீங்கள் எல்லாம் என்னைப் பாராட்டிப் பட்டம் கொடுக்கும் அளவுக்கு நான் எதுவும் செய்துவிடவில்லை. என் கடமையைச் செய்தேன். அதற்காக அரசாங்கம் எனக்கு நல்ல சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. தத்தம் கடமையைச் செய்வதற்கே பாராட்டா? மனிதர்களாகிய நாம் அரிய பெரிய சாதனைகளைச் செய்ய வேண்டியதில்லை. அவரவர்க்குள்ள கடமைகளைச் செய்தாலே போதும். கடமையாற்றும்போது நாம் நேர்மையைக் கடைப்பிடித்தால் அனைவரும் பாராட்டுகிறார்கள். இது அனுபவத்தில் நான் கற்றுக்கொண்ட பாடம். ஒவ்வொரு வருஷமும் சிறந்த போலீஸ் அதிகாரி, சிறந்த டாக்டர், சிறந்த வக்கீல், சிறந்த என்ஜினீயர், சிறந்த எழுத்தாளர், சிறந்த பள்ளியாசிரியர் என்று ஒவ்வொரு துறையிலும் சிறப்பாகப் பணியாற்றுபவர்களைத் தேடிப் பிடித்துப் பாராட்டிப் பட்டம் வழங்கி கவுரவிக்கும் ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

மேலும் அரை மணி நேரம் நீடித்த நிகழ்ச்சி தேசிய கீதத்தைத் தொட்டபோது நேரம்

ஒன்பது இருபது.

மேடையை விட்டு இறங்கிய ப்ரதீபாவை பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண் டார்கள்.

''மேடம்! போலீஸ் துறையில் இவ்வளவு துணிச்சலா செயல்படறீங்களே... ஆபத்து ஏதும் வராதா...?''

''வரட்டுமே... பார்த்துக்கலாம்...''

''மேடம்! இந்த ஊரிலிருந்து கூடிய சீக்கிரமே உங்களை ட்ரான்ஸ்பர் பண்ணப் போறதா செய்தி...?''

''பண்ணட்டுமே...! ட்ரான்ஸ்பர் பண்றதா யிருந்தா தமிழ்நாட்டுக்குள்ளதானே பண்ணுவாங்க... ஆப்பிரிக்காவுக்கு பண்ண மாட்டாங்களே?''

''நீங்க யார்க்கும் பயப்படறதில்லையே எப்படி?''

''எதுக்காகப் பயப்படணும்...?''

''மெட்ராஸ் சிட்டியில் முக்கியமான குற்றங்களா எதை எதை நினைக்கறீங்க...?''

''விபச்சாரம். பேட்டை ரௌடீஸம்.''

''ஒழிக்க முடியுமா மேடம்...?''

''சட்டத்தைக் கடுமையாக்கினா எதையுமே ஒழித்துக் கட்டலாம்'' - ப்ரதீபா நிருபர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டே விழா மண்டபத்தை விட்டுக் கொஞ்சம் தள்ளி நின்றிருந்த கார்க்கு வந்தாள்.

ட்ரைவிங் சீட்டில் அவளுடைய கணவன் மகேஷ் தெரிந்தான். ப்ரதீபா அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறி உட்கார - அது உடனே கிளம்பியது.

ப்ரதீபா நினைவுப் பரிசை பின் சீட்டில் கிடத்திவிட்டு கணவனைப் பார்த்தாள்.

''ஸாரி...''



''எதுக்கு ஸாரி...?''

''ஃபங்ஷன் முடிய கொஞ்சம் லேட்டாயிடுச்சு...''

''பரவாயில்லை...''

இரண்டு நிமிஷங்களுக்கு கார் மௌனமாய் போய்க் கொண்டிருந்தது.

பொறுமையிழந்து கேட்டாள்.

''என்ன ஒண்ணுமே பேசாம வர்றீங்க?''

''என்னத்தை பேசறது...?''

''ஃபங்ஷன் எப்படியிருந்ததுன்னு கேட்கலாமே?''

''ஃபங்ஷன் மோசமாகவா நடந்து இருக்கும்... ரோட்டரி க்ளப் ஃபங்ஷனாச்சே...?''

''நீங்க ரெண்டரை மணி நேரமும் கார்க்குள்ளேயே இருந்தீங்களா...?''

''இல்லை. பீச் ரோட்ல கொஞ்ச தூரம் வாக்கிங் போயிட்டு வந்தேன்.''

''மண்டபத்துக்குள்ளே வந்திருக்கலாமே...?''

''எனக்குத்தான் இந்த விழாவெல்லாம் பிடிக்காதே! மைக்கைப் பிடிச்சுட்டு அவங்க கத்தறதைக் கேட்க எனக்குப் பொறுமை கிடையாது.''

''இது அரசியல் கூட்டமில்லை. எனக்குப் பாராட்டு விழா.''

''எதாயிருந்தா எனக்கென்ன...?''

''சரி... உங்ககிட்ட பேச முடியாது. காரை ஓட்டுங்க.''

''வேற விஷயம் பேசலாமே...?''

''என்ன...?''

''நேத்து ராத்திரி நான் ஒரு விஷயம் சொன்னேனே?''

''எது...?''

''மறந்துட்டியா... இல்லை... மறந்துட்ட

மாதிரி நடிக்கிறியா?''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலை.''

''இந்தப் போலீஸ் உத்யோகம் உனக்கு வேண்டாம். ராஜினாமா பண்ணிடுன்னு சொன்னேன்.''

''ஓ... அதுவா...?''

''அதேதான்! என்ன யோசனை பண்ணியிருக்கே?''

''இன்னும் யோசனையே பண்ணலை.''

''சீக்கிரமா யோசனை பண்ணி ஒரு முடிவைச் சொல்லு!''

''ஸாரி...! அதைப் பத்தி நான் யோசனையே பண்ணப் போறதில்லை.''

''இதுக்கு என்ன அர்த்தம்?''

''என்னோட போலீஸ் உத்யோகத்தை ராஜினாமா பண்ண மாட்டேன்னு அர்த்தம்.''

காரின் வேகத்தை சட்டென்று குறைத்து ரோட்டோரமாய் ஒதுக்கி நிறுத்தினான் மகேஷ்.

''என்னது! போலீஸ் உத்யோகத்தை ராஜினாமா பண்ண மாட்டியா...?''

''ஆமா...! எதுக்காக ராஜினாமா பண்ணனும்?''

''எனக்குப் பிடிக்கலை.''

''எனக்குப் பிடிச்சிருக்கு...''

''ப்ரதீபா! நீ இப்படிப் பிடிவாதம் பிடிச்சா அதனோட விளைவு விபரீதமா இருக்கும்...''

ப்ரதீபா புன்னகைத்தாள்.

''அப்படியென்ன விபரீதமான விளைவோ...?''

''நீ போலீஸ் உத்யோகத்தை ராஜினாமா பண்ணலைன்னா...?''

''பண்ணலைன்னா...?''

''நான் உன்னை டைவோர்ஸ் பண்ண வேண்டியிருக்கும்.''

# 2

(ஃப்ளாஷ் பேக்)

நகர ஆரம்பித்துவிட்ட பஸ்ஸின் படிக்கட்டில் லாவகமாய் தாவி ஏறினான் மகேஷ்.

வேலைக்குச் செல்லும் ஆண் பெண் என்று கலவையாய் கலந்த கும்பல் பஸ்ஸுக்குள் அடைசலாய் நின்றிருந்தார்கள்.

புழுக்கம் தாக்கி உடம்பெல்லாம் வியர்வையில் கசகசக்க - கூட்டத்தைத் துளைத்துக் கொண்டு சிரமத்துடன் முன்னேறி காற்றுக்காக ஜன்னலோரம் போய் நின்றான்.

பஸ் அடுத்த ஸ்டாப்பில் பதினைந்து விநாடிகள் நின்றுவிட்டு மீண்டும் புறப்பட்டபோது எதேச்சையாய் மகேஷின் பார்வை இடது புறம் திரும்ப - முகம் மாறியது.

கொஞ்சம் தள்ளி இரண்டு இளைஞர்கள். அவர்களின் ரோமம் மழிக்காத முகங்களில் கணிசமான ரௌடிஸம். இருவரும் பரஸ்பரம் பார்த்து புன்னகைத்துக் கொள்ள - அதில் கிலோ கணக்கில் கேலி.

அவர்களுக்கு முன்புறமாய் ஒரு பெண் அவஸ்தையாய் நெளிந்தபடி வாய்க்குள் முனகிக் கொண்டிருந்தாள்.

இளைஞர்களில் ஒருத்தன் தாவணி இடைவெளியில் பளிச்சிடும் அவளின் வெண்ணெய் நிற இடுப்பை அத்தனை கூட்டத்துக்கு மத்தியிலும் தைரியமாய்த் தடவிக் கொண்டிருக்க -

அவள் நெளிந்து அவனிடமிருந்து விலகி முன்னால் செல்ல முயன்று - முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

இடுப்பைத் தடவுவதும் தன் சகாவைப் பார்த்து வெற்றிப் புன்னகை பூப்பதுமாக இருந்த அவனைப் பார்த்ததும் மகேஷுக்குள் உஷ்ணம் கிளம்பியது.

கோப முகத்தோடு முன்னால் இருந்தவரை விலக்கிக் கொண்டு போக முயல - அவர் அவனைத் தடுத்து மெல்லிய குரலில் கிசுகிசுத்தார்.

''என்ன தம்பி... அந்த ரெண்டு பேர் பண்ற அநியாயத்தைத் தட்டிக் கேக்கலாம்னு நினைக்கறீங்களா...?''

அவன் அவரையே பார்த்தான்.

அவர் தொடர்ந்தார்.

''இங்கே இருக்கறவங்க எல்லாருமே அவனுக அட்டகாசத்தைப் பார்த்துகிட்டுத் தான் இருக்காங்க... ஆனா அவன்களைத் தட்டிக் கேக்க யாராலும் முடியாது...''

''ஏன்...?''

''ரெண்டு பேரும்... இந்த ஏரியாவில் பெரிய ரௌடிங்க. அவங்க பாஷையே சைக்கிள் செயின்... கத்தி... ரத்தம்... இதெல்லாம்தான்... அவன்களோட சரிசமமா நின்னு நம்மால போராட முடியாது... பார்க்க டீசன்ட்டா இருக்கீங்க... நீங்க அவன்கிட்ட மாட்டிக்கக்கூடாதுன்னுதான்... நான் உங்ககிட்டே சொன்னேன்... நீங்க லேசா வாயைத் திறந்தாலும் ப்ளேடால் கீறிடுவாங்க...''

அவருடைய எச்சரிக்கையைக் காதில் வாங்கிய மகேஷ் உறைந்து போய் நின்றுவிட்டான்.



ரௌடிகளின் சில்மிஷங்கள் தொடர்ந்தது.

மேற்கொண்டு நகர முடியாமல் போக - அந்தப் பெண் கோபம் கலந்த தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சன்னமான குரலில் கேட்டாள்.

''ஏன் இப்படி மேல மேல விழறிங்க...? கொஞ்சம் பின்னாடி தள்ளி நில்லுங்க...''

''பின்னாடி நிக்கறவன் எங்க மேல விழறான்... நாங்க உன் மேல விழறோம்... அடுத்தவன் மேல உரசாம போகணும்ன்னா நீ டாக்சி புடிச்சிப் போகணும்... ட்வுன் பஸ்ஸில் வரக்கூடாது...'' - சொல்லிவிட்டு சிரித்தவனை எரிச்சலோடு ஏறிட்டாள் அந்தப் பெண்.

''தெரியாம இடிக்கறதுக்கும் வேணு மின்னே இடிக்கறதுக்கும் வித்தியாசம் இருக்கு.''

''தெரியாம இடிச்சா ஓக்கேதான்ங் கறியா...? டேய்... பாப்பாவை ஒரு தடவை தெரியாம இடிச்சிடேன்...''

அவன் வேண்டுமென்றே அவள் மேல் மோதினான்.

அந்தப் பெண் கலவர விழிகளோடு கூட்டத்தைப் பார்த்தாள்.

''இத்தனை பேர் இருக்கீங்க... சும்மா வேடிக்கைப் பார்க்கறீங்களே...?''

ரௌடிகளில் ஒருத்தன் சிரித்தான், கும்பலைப் பார்த்து.

''எவனாவது பொதுச் சேவை பண்ண வந்தா குடலை உருவிடுவோம். மரியாதையா பஸ்ஸுக்கு வெளியே வேடிக்கை பார்த்துட்டு வாங்க. பஸ் இந்த ஏரியாவுக்குள்ளே வந்துட்டா அது எங்க சொத்து... எவளை வேணும்னாலும் தடவுவோம்... உரசு

வோம்... யாரும் கண்டுக்கக் கூடாது...''

அந்தப் பெண் செய்வதறியாது திகைத்துட போய் கலவரக் கண்களோடு நின்றிருக்க கும்பலில் ஒரு பெண் குரல் பஸ்ஸுக்குள் முளைத்தது.

''ராஸ்கல்...! கேக்கறதுக்கு ஆள் இல்லைன்னா ஒரு பொண்ணுகிட்டே என்ன வேணா செய்வீங்களாடா...?''

அந்தப் பெண் குரலைக் கேட்டு ரவுடிகள் இருவரும் திரும்பினார்கள். உஷ்ணமாய் கேட்டார்கள். ''எவடி அவ...?''

நீல நிறத்தில் ப்ளெயின் ஸாரி உடுத்தியிருந்த ப்ரதீபா பயணிகளை விலக்கிக் கொண்டு முன்னாள் வந்தாள். மார்புக்கு குறுக்காகக் கைகளைக் கட்டியபடி சொன்னாள்.

''இப்போ என் முன்னாடி அந்தப் பொண்ணைத் தொட்டுப் பாருங்கடா...''

''என்னடி... சத்தமாப் பேசினா பயந்துருவோம்ன்னு நினைச்சியா? இல்லே... நாங்க உன்னையும் உரசணும்னு முன்னாடி வந்து நிக்கறியா...?''

கேட்டுக் கொண்டே ஒருத்தன் ப்ரதீபாவின் கன்னத்தை லேசாக வருட முற்பட்டான்.

ப்ரதீபா அவன் கையை தனது இடது கரத்தால் முறுக்கிப் பிடித்துக் கொண்டு வலது கரத்தைக் காற்றில் வீசினாள்.

'ர்ரப்ப்...'

அறை வாங்கியவனின் கண்களுக்குள் தீப்பொறிகள் பறந்தன.

அடுத்தவன் வாங்கியிருந்த அறையிலேயே அரண்டு போன இன்னொருவன் இடுப்பிலிருந்து கத்தியை உருவினான்.

ப்ரதீபா அசரவில்லை.



இரண்டு கைகளையும் மின்னல் வேகத்தில் அவன் கழுத்தில் வெட்டினாள். கராத்தே ஸ்ட்ரோக்!

''ம்ம்... மா..''

கத்தி நழுவி விழுந்தது.

''டிரைவர்... வண்டியை நிறுத்துங்க...''

பஸ் நிற்க - அவர்கள் இரண்டு பேரையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாள்.

நிலை குலைந்து படிக்கட்டில் உருண்டு ரோட்டில் விழுந்தார்கள் அவர்கள். ப்ரதீபா உறுமினாள்.

''இனிமே எந்தப் பொண்ணையாவது உரசினே ஜி.ஹெச்ல போய் மாசக் கணக்கா படுக்க வேண்டி வந்துடும். பொம்பளைன்னா என்னடா நினைக்கறீங்க...?''

இமைக்க மறந்து ப்ரதீபாவையே பார்த்தான் மகேஷ்.

## 3

**கா**ர் ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் இருட்டைக் கிழித்துக் கொண்டு இருந்தது. சாலை விளக்குகள் சீரான இடைவெளிகளில் காருக்குள் மின்னல் அடித்தன.

எந்தவித சலனமும் இல்லாமல் ஸ்டியரிங்கைக் கையாளுகிற மகேஷைப் பார்த்தாள் ப்ரதீபா.

சன்னமான குரலில் வாயைத் திறந்தாள்.

''நல்லா யோசனை பண்ணித்தான் சொல்லறீங்களா...?''

''இதிலே யோசனை பண்ண என்ன இருக்கு...?''

''டைவர்ஸ்ங்கறது பானையைத் தூக்கிப்

போட்டு உடைக்கற மாதிரி காரியம்... திரும்ப ஒட்ட வைக்க முடியாது...''

''எதுக்குத் திரும்ப ஒட்ட வைக்கணும்...?''

''நாம இஷ்டப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிகிட்டோம்... அதுவும் நீங்களாக என்னைத் தேடி வந்தீங்க... இப்போ நீங்களே டைவர்ஸ்ங்கற வார்த்தையை சொல்றது சரியான்னு யோசிச்சுப் பாருங்க...''

''நானா சொல்லலை... உன்னோட பிடிவாதம்தான் என்னை அப்படிச் சொல்ல வைக்குது... என்னோட எதிர்பார்ப்புக்கு தகுந்த மாதிரி நீ நடந்துக்காதப்ப நமக்குள்ளே கணவன் மனைவிங்கற போலியான பந்தம் எதுக்கு...?''

''உங்களுக்காக எத்தனையோ விஷயங்களில் நான் அட்ஜஸ்ட் பண்ணிப் போயிருக்கேன்... ஆனா துரோணர் கட்டை விரலைக் கேட்ட மாதிரி போலீஸ் உத்தியோகத்தை விட்டுடுன்னு சொன்னா எப்படிங்க...''

''பொறந்தப்பவே நீ காக்கி ட்ரஸ்சோடவா பொறந்தே? நீ வேற எந்த உத்தியோகத்துக்கு வேணா போ... ஆனா போலீஸ் உத்தியோகம் வேண்டாம்... டிபார்ட்மென்ட்டுக்கு ஒரு கால் கடுதாசியை எழுதி நீட்டினீன்னா... இந்த நிமிஷமே நான் என்னோட டைவர்ஸ் முடிவை மாத்திக்கறேன்...''

ப்ரதீபா முகம் இறுகிப் போனாள்.

''போலீஸ் துறையில் நான் இன்னும் எவ்வளவோ சாதனைகள் பண்ணணும்கிற துடிப்போட இருக்கேன்... நான் நினைச்சதையெல்லாம் சாதிக்கணும்ன்னா இந்தக் காக்கி உடுப்பு நிச்சயமா எனக்கு வேணும்.''

''அந்த விஷயத்தில் நீ இவ்வளவு உறுதியா



இருந்தா, நான் எடுத்த முடிவிலிருந்து மாறட போறதில்லை...''

''சரி... இனிமே அதைப் பத்திப் பேசலை.. நான் டைவர்ஸை விரும்பலை... அதே சமயத்தில் நீங்க அப்படி ஒரு முடிவை எடுத்த பிறகு நான் உங்க முடிவை சட்ட ரீதியா எதிர்த்து நிக்கப் போறதில்லை... நாளைக்கே நீங்க முறைப்படி டைவர்ஸுக்கு அப்ளை பண்ணுங்க... சட்ட பூர்வமா என்னென்ன ஏற்பாடுகள் செய்யணுமோ செய்யுங்க... எங்கெல்லாம் கையெழுத்துப் போடணுமோ போடறேன்... கோர்ட் மூலமா சட்ட பூர்வமா விவாகரத்து வாங்கற வரைக்கும் நான் உங்களோட மனைவியா இருப்பேன்...''

கார் மெயின் சாலையை விட்டு குறுகலான கிளைத்தெருவுக்குள் திரும்பியது.

ஒரு நிமிஷ கார் பயணத்திற்கு பிறகு - அந்த மினி பங்களாவின் முன்னால் நின்றது கார்.

கீழே இறங்கி காம்பௌண்ட் கதவைத் திறந்து வைத்தாள் ப்ரதீபா.

கார் போர்டிகோவில் ஒதுங்கி நின்றது.

காம்பவுண்ட் கேட்டை மீண்டும் பழையபடி சாத்திவிட்டு போர்டிகோ படிகளில் ஏறினாள்.

ஜன்னல் வழியே ஹாலில் ட்யூப் லைட் எரிவது தெரிந்தது.

கார்ச் சத்தம் கேட்டு ஆயா கதவைத் திறந்தாள்.

இதழ்களாய் உதிர்கிற ரோஜா மாலையையும், ஷீல்டையும் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள் ப்ரதீபா.

''ஆயாம்மா... லில்லி தூங்கிட்டாளா...?''

அந்த அம்மாள் தலையை ஆட்டினாள்.

''இல்லீங்கம்மா... நானும் எவ்வளவோ

முயற்சி பண்ணிப் பார்த்துட்டேன்... கதை சொன்னேன்... பாட்டுப் படிச்சேன்... அவ கண்ணை மூடவே இல்லை... டாடியும், மம்மியும் வந்த அப்புறம்தான் தூங்குவேன்னுட்டா...''

ஆயா சொல்லிக் கொண்டிருந்த போதே -

இடுப்பில் அணைத்துக் கொண்ட பெரிய கரடி பொம்மையோடு ஐந்து வயது லில்லி வேகமாய் மாடிப்படிகளில் இறங்கி வந்தாள்.

''மம்மி...! டாடி...!''

ஓடிவந்து இருவரின் கால்களையும் கட்டிக் கொண்டாள்.

ப்ரதீபா மகேஷைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

## 4

(ப்ளாஷ் பேக்)

**வா**சலில் கார் சத்தம் கேட்டு கதவைத் திறந்தாள் மரகதம். பட்டுப் புடவை உடுத்திய இரண்டு பெண்கள். பளிச்சென்ற வெள்ளையில் சட்டை உடுத்திய இரண்டு பேர். பேண்ட் சர்ட்டில் ஒரு அழகான இளைஞன். வாசலில் கடல் வண்ணத்தில் ஒரு காண்டஸா தெரிந்தது.

மரகதம் குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டு நிற்க, ஒரு பெண் கேட்டாள்.

''மரகதம் அம்மாள் வீடு இதுதானே...?''

''அ... ஆமா...''

''நீங்கதான் மரகதமா...?''

''ஆமா...''



''உங்க வீட்டைத் தேடித்தான்ம்மா வந்திருக்கோம். வீட்டை சிரமப்பட்டுக் கண்டுபிடிச்சோம்... இந்த ஏரியாவை கார்ல நாலு தடவை சுத்தி வந்துட்டோம்...''

படபடவென்று பேசிய அந்தப் பெண்ணை திகைப்புடன் பார்த்தவள் - மறு விநாடி சுதாரித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''உள்ளே வாங்க...''

''இந்த வீடுதான்னு தெரிஞ்சிருச்சே... காரிலிருந்து சீர் வரிசைத் தட்டெல்லாம் உள்ளே எடுத்துட்டுப் போங்க...'' என்றார் வந்திருந்த பெரியவர்.

முன் ஹாலில் பாயை விரித்துப் போட்ட மரகதம், தயக்கக் குரலில் கேட்டாள்.

''நீங்க எல்லாரும் யாருன்னு தெரியலையே...?''

அந்தப் பெரியவர் மெல்லிய குரலில் சொன்னார்.

''நான் சுத்தி வளைக்காமே நேரடியாவே விஷயத்துக்கு வந்துடறேன். உங்க பொண்ணு ப்ரதீபாவை எங்க பையனுக்கு பொண்ணு கேட்டு வந்திருக்கோம்...''

மரகதத்தின் முகத்தில் திகைப்பின் பரப்பளவு அதிகரித்தது.

''அவளுக்கு கல்யாணம் பண்ணப் போறதா நாங்க யார்கிட்டேயும் சொல்லலையே...? தெரிஞ்ச தரகர்கள் அவங்களாகவே கேட்டப்பக்கூட இப்போதைக்கு அந்த யோசனை எதுவும் இல்லைன்னுதானே சொல்லியிருந்தோம்...''

கத்திரிப்பூ நிறத்தில் பட்டுப் புடவையும், கழுத்து நிறைய நகைகளும் அணிந்திருந்த அந்தப் பெண் அகலமாய் புன்னகைத்தாள்.

''தரகர் சொல்லியோ... அல்லது வேற யார்

மூலமாவது விசாரிச்சுத் தெரிஞ்சுகிட்டோ. நாங்க வரைல... நீங்க எப்படியும் ஒரு நல்ல பதிலைச் சொல்லுவீங்கன்னு நாங்களாகவே முடிவெடுத்து வந்திருக்கோம்...''

பெரியவர் சொன்னார்.

''மாப்பிள்ளைப் பையன் மகேஷுக்கு உங்க பொண்ணை ரொம்பப் பிடிச்சுப் போச்சு... அவன் விருப்பத்தை நிறைவேத்தி வெக்கறதில்தான் எங்களுக்கும் சந்தோஷம்... அவனுக்கும் சந்தோஷம்...''

இன்னொருவர் தொடர்ந்தார்.

''மகேஷோட விருப்பத்துக்கு மதிப்புக் குடுத்து நாங்க இங்கே வந்து இருக்கோம்... அதனால நகையோ, பணமோ டிமாண்ட் பண்ற உத்தேசம் எங்களுக்கு இல்லை.''

மரகதம் குறுக்கிட்டாள்.

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கேக்கறாங்களோ இல்லையோ... எங்க தகுதிக்குத் தகுந்த அளவில் இருபது முப்பது பவுன் சேத்துத்தான் வெச்சு இருக்கோம்... ஆனா...''

''சொல்லுங்க...''

''கல்யாணச் செலவுக்கு நாங்க இன்னும் தயாராகலை... ப்ரதீபாவோட அப்பாவும் காலமாயிட்டார்... அவ ஒருத்தியோட சம்பாத்தியம்தான்...''

''இப்படி ஒரு சாக்குப்போக்கை நீங்க சொல்லுவீங்கன்னு எங்களுக்கு தெரியும்.''

''சாக்குப் போக்கு இல்லைங்க... இது நிஜமாக நிலவரம்... அதனாலதான் வந்த தரகர்கள்கிட்டேகூட இன்னும் கொஞ்சம் நாள் பொறுத்துக்கச் சொல்லி அனுப்பிட்டிருந்தேன்...''

''செலவைப் பத்தியெல்லாம் நீங்க



கவலைப்படவே வேண்டாம்... மனுஷங்க தான் எங்களுக்கு முக்கியம்... பணம் எல்லாம் அப்புறம்தான்... மகேஷுக்கு உங்க பொண்ணு ப்ரதீபாவை ரொம்பப் பிடிச்சுப் போச்சு... அதுக்கு மேல வேற எந்தத் தகுதியையும் நாங்க உங்ககிட்டே எதிர் பார்க்கலை...''

இப்போது மகேஷ் குறுக்கிட்டான்.

''உங்க பொண்ணை ஒரு தடவை பஸ்ஸில் பார்த்தேன்... ரெண்டு ரவுடிப் பசங்களின் அட்டகாசத்தை, நான் உட்பட அத்தனை ஆம்பளைங்களும் வேடிக்கை பார்த்து கிட்டிருந்தோம். ஆனா உங்க பொண்ணு துணிச்சலா அவங்களோட கொட்டத்தை அடக்கினா... அந்த ஒரு சம்பவத்திலேயே நான் ரொம்ப இம்ப்ரெஸ் ஆயிட்டேன்...''

''அநியாயத்தைத் தட்டிக் கேக்கறது... யாராயிருந்தாலும் தைரியமா எதிர்த்துப் போராடறது... இதெல்லாம் அவகூடப் பொறந்த குணம்... அதனாலதான் பரீட்சை எழுதி பாஸ் பண்ணி போலீஸ் வேலைக்கே போயிட்டா...''

மரகதம் பெருமிதம் வழியும் குரலில் சொல்ல - அங்கே இருந்த அத்தனை பேரின் முகங்களும் சட்டென்று மாறிப்போயின.

பெரியவர் முணுமுணுத்தார்.

''போலீஸ் வேலையா...?''

## 5

ஆட்டோ, வாசலில் வந்து நின்று ஏர் ஹார்ன் அடித்தது. ஸ்கூல் பேகுகள் ஆட்டோவை விட்டு வெளியே பிதுங்கியிருக்க -

உள்ளே கான்வென்ட் யூனிஃபார்ம் அணிந்த குழந்தைகள்.

ப்ரதீபா உள்ளே இருந்து கத்தினாள்.

''ஆட்டோ வந்தாச்சு... நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க...? லில்லியை அனுப்பி வையுங்க.''

பேப்பர் படித்துக் கொண்டிருந்த மகேஷ் எரிச்சலோடு நிமிர்ந்தான்.

''நீ என்ன பண்ணிட்டிருக்கே...?''

''முக்கியமான ரிப்போர்ட்டை ப்ரிப்பேர் பண்ணிட்டிருக்கேன்... இதை எடுத்துக்கிட்டு கமிஷனர் ஆபீஸுக்குப் போகணும்... இன்னும் பத்து நிமிஷத்துக்கு நான் இந்த இடத்தை விட்டு அசைய முடியாது...''

மகேஷ் எரிச்சலோடு டீபாயின் மேல் கிடந்த ஸ்கூல் பேகை எடுத்துக் கொண்டான். தயாராகி நின்றிருந்த லில்லியைக் கையைப் பிடித்துக் கூட்டிப் போய் ஆட்டோவில் ஏற்றி விட்டுத் திரும்பி வந்தான்.

ப்ரதீபா எழுதிக் கொண்டிருந்த மேஜையருகே வந்து நின்றான்.

''இது உனக்கே நல்லா இருக்கா...?''

''எது...?''

''குழந்தையைவிட உனக்கு இது முக்கியமா...?''

''அவசர வேலை இருந்ததாலதான் உங்ககிட்டே சொன்னேன்... நீங்க பேப்பர்தானே படிச்சிட்டிருந்தீங்க...''

''புருஷனையும், குழந்தையையும்கூட கவனிக்க விடாத இந்த வேலை உனக்கு அவசியம்தானா...?''

''முடிஞ்சு போன விவகாரத்தைத் திரும்பத் திரும்பக் கிளற வேண்டாம். டைவர்ஸ் பண்ற முடிவுக்கு ராத்திரியே நாம ரெண்டு பேரும் ஒரு மனதா வந்துட்டோம்... மறுபடியும் எதுக்கு அந்தப் பேச்சு...!''



''லில்லியை என்ன பண்றதுன்னு ராத்திரி பூராவும் குழப்பமா இருந்துச்சு... அவ பெண் குழந்தைங்கறதால - உன்கிட்டே வளரட்டும்ன்னுதான் அநேகமா கோர்ட் உத்தரவு இருக்கும்... லில்லிகிட்டே சின்ன விஷயங்களில்கூட அக்கறை காட்டாத உன்கிட்டே அவ எப்படி வளர்ந்து பெரியவளாவாள்ன்னு தெரியலை...''

புன்னகைத்தாள் ப்ரதீபா.

''அவளுக்கு என்னை விட உங்க மேலதான் பாசம் ஜாஸ்தி... நான் கண்டிப்பு காட்டறதால உங்ககிட்டேதான் அதிகம் ஒட்டுவா... லில்லி உங்ககிட்டே வளரணும்னு நீங்க விருப்பப்பட்டா... அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது... ஸோ, இப்ப இருந்தே அவளுக்கு தலை வாரி விடறது... ஆட்டோவில் அனுப்பி வெக்கறது... எல்லாத்துக்கும் ட்ரெயினிங் எடுத்துக்குங்க...''

மகேஷ் ப்ரதீபாவை முறைத்தான்.

''உனக்குள்ளே இருக்கறது மனசா இல்லை கல்லா...?''

''எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்து சொல்றேன்... இப்போ என்னைக் கொஞ்சம் ரிப்போர்ட் எழுத விடறீங்களா...?''

அவள் எழுத ஆரம்பித்துவிட மகேஷ் மவுனமாய் நகர்ந்தான்.

சரியாய்ப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பின் ரிப்போர்ட் காகிதங்களைக் கவரில் போட்டுக் கொண்டு எழுந்து வந்தாள். சோபாவில் உட்கார்ந்திருந்த மகேஷைப் பார்த்தாள்.

''கிளம்பலாம்...''

''ராத்திரியே நான் உன்கிட்டே ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டின்னா வக்கீலைப் பார்த்து பூர்வாங்க சம்பிரதாயங்களை முடிச்சிரலாம்ன்னு சொல்லியிருந்தேனே...''

''போன் பண்ணி காலைலயே நான் பர்மிஷன் போட்டுட்டேன்.., கவலைப்பட வேண்டாம்... லாயர் ஆபீஸுக்குப் போயிட்டு அப்புறமாத்தான் கமிஷனர் ஆபீஸுக்குப் போவேன்... இந்தப் ப்ரதீபா வார்த்தை தவற மாட்டாள்...''

மகேஷ் கார் சாவியைப் பொறுக்கிக் கொண்டான்.

மௌனமான முப்பது நிமிஷப் பயணம்.

குடும்ப வக்கீல் சற்குணம் இளம் தொந்தியோடு முன் அறையிலேயே கிடைத்தார். வழக்கமாய் அவர்கள் சென்றால் உற்சாகமாய் சிரித்து வரவேற்பார். இந்த நிமிஷம் அவர் உதடுகளில் சிரிப்பின் சதவிகிதம் சைபராகியிருந்தது. முகத்தில் கணிசமாய் ஒரு கொத்து வருத்தம்.

''ராத்திரி மகேஷ் போன்ல என்கிட்ட எல்லாத்தையும் சொன்னார்.. அதிர்ச்சியா இருந்தது.''

''மனசு ஒத்துப் போகலைன்னா பிரிவு தானே அதுக்கு மருந்து! இதில் அதிர்ச்சி அடைய என்ன ஸார் இருக்கு...?''

ப்ரதீபா புன்னகையோடு சொல்ல - லாயர் நிமிர்ந்தார்.

''இந்த நிலைமையில் உன்னால எப்படிம்மா சிரிச்சுப் பேச முடியுது... டைவர்ஸ்க்கு நீ எப்படி முழு மனசோட ஒத்துக்கிட்டே...?''

''முழு மனசோட நான் டைவர்ஸுக்கு ஒத்துகிட்டதா நீங்க நினைக்கறது தப்பு லாயர் ஸார்... இவர் அந்த முடிவுக்கு வந்துட்டார்...



டைவர்ஸ்ன்னு ஆம்பளை வாயைத் திறந்து சொன்னப்புறம்... 'ஓ'ன்னு கதற்ற சங்க காலப் பெண்ணில்லை நான்... இவர் மனசில் விரிசல் விழுந்தப்புறம் கூடவே ஒட்டிகிட்டிருந்து என்ன பிரயோஜனம்? என்னைப் பொறுத்தவரைக்கும் 'நாம டைவர்ஸ் பண்ணிக்கலாம்' அப்படின்னு இவர் வாயைத் திறந்து சொன்ன விநாடியே விவாகரத்து ஆன மாதிரிதான்... இப்போ உங்களைப் பார்க்கறது... கோர்ட்டுக்குப் போறது... எல்லாமே வெறும் சம்பிரதாயங்கள்... ஆக வேண்டியதெல்லாம் ஏற்கெனவே ஆயிடுச்சு... லாயர் ஸார்.''

''மகேஷ்...! நீங்க இதுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க...?''

''இவளுக்கு என்னையும், குழந்தையையும் விட உத்தியோகம்தான் பெரிசா இருக்கு ஸார்... எல்லா வகையிலும் சொல்லிப் பார்த்துட்டேன்... வேலையை விட மாட்டேன்னு தீர்மானமா சொல்லிட்டா...''

''லாயர் ஸார்... வேலை பார்த்ததால இவருக்கோ, குழந்தைக்கோ செய்ய வேண்டிய காரியங்களில் என்னிக்கு நான் குறை வெச்சிருக்கேன்...? இந்த இருபதாம் நூற்றாண்டுல வேலைக்குப் போகாத பெண்கள்தான் குறைவு... இவர் நான் வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்றதை யாராவது ஏத்துப்பாங்களா...?''

மகேஷ் குறுக்கிட்டான்.

''போலீஸ் வேலை வேண்டாம்னு சொல்றேன்... வேற எந்த வேலைக்குப் போனாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை...''

''போலீஸ் உத்தியோகத்தை விட நான்

தயாரா இல்லை ஸார்... டிபார்ட்மெண்ட்டில் நான் சம்பாதிச்சிருக்கிற பேரையும், புகழையும் ஒரு கால் கடுதாசியில் தொலைக்க விரும்பலை...''

மகேஷ் எரிச்சலானான்.

''லாயர் ஸார்...! எதுக்கு வீண் பேச்சு...? நாங்க தீர்க்கமான முடிவோடதான் இங்கே வந்திருக்கோம்... சட்ட பூர்வமா என்ன செய்யணுமோ அதைச் செய்யுங்க... இனிமே நாங்க மனசு மாறி ஒண்ணு சேர்றதுக்கான வாய்ப்பு எதுவும் கிடையாது. அவ அவளோட முடிவில் உறுதியா இருக்கா... நான் என்னோட முடிவில் உறுதியா இருக்கேன்...''

சற்குணம் கோர்ட் பேப்பர்களை எடுத்து வைத்தார். பாரங்களில் கையெழுத்து போட வேண்டிய இடங்களில் பால்பாயிண்ட் பேனாவினால் பெருக்கல் குறி இட்டார்.

## 6

(ப்ளாஷ் பேக்)

போலீஸ் ஸ்டேஷன்.

ரைட்டர் மருதாசலம் அறைக்குள் நுழைந்து - விறைப்பாய் நின்று சல்யூட் ஒன்றை அடிக்க -

காக்கி உடைக்குள் திணிந்திருந்த ப்ரதீபா ஃபைலைச் சாத்தியபடி நிமிர்ந்தாள்.

''என்ன மருதாசலம்...?''

''உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கார் மேடம்...''

''உள்ளே வரச் சொல்லு...''



தலையசைத்து விட்டு அவர் வெளியேறிச் சென்ற சில விநாடிகளில் அறை வாசலில் நிழலாடி - மகேஷ் உள்ளே பிரவேசித்தான்.

சின்ன நெற்றிப் பரப்பில் சுருக்கங்கள் விழ அவனைப் பார்த்தாள்.

அவன் மெலிதாய்ப் புன்னகைத்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''ஐ'யாம் மகேஷ்...''

''மகேஷ்...?''

''நேத்திக்கு உங்க வீட்டுக்கு முறைப்படி பொண்ணு கேட்டு வந்தது நான்தான்...''

ப்ரதீபாவின் முகத்தில் வியப்பு ஒட்டிக் கொண்டது.

''ஓ... நீங்கதானா... உக்காருங்க... ப்ளீஸ்...''

அவன் உட்கார்ந்து கொண்டே சொன்னான்.

''நீங்க ரொம்பக் கோபமா இருப்பீங்கன்னு நினைக்கிறேன்.''

''கோபமா...? எனக்கா...? எதுக்கு...?''

''நீங்க இப்படிக் கேட்டாலும்... என்னோட தப்பை நான் ஒத்துக்கத்தான் வேணும்... மொதல்ல நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்... என்னோட வீட்டைச் சேர்ந்தவங்க உங்களை வலிய வந்து அவமானப்படுத்திட்டாங்க...''

''நான் அப்படி நினைக்கலை...''

''என்னோட மனசாட்சி உறுத்தறது... நாங்களாகவே வந்து 'கல்யாணம் பண்ணிக் கறோம்... சம்மதம் சொல்லுங்க'ன்னு கேட்டு, கடைசியில், 'இந்தப் பொண்ணு வேண்டாம்'ன்னு எழுந்து வர்றது மகா தப்பு...''

''தப்பு அவங்ககிட்டே இல்லை...

உங்ககிட்டே தான்...''

''சர்ட்டன்லி... அவங்க எல்லாருமே ரொம்ப ஆர்த்தடாக்ஸ்டு... நீங்க போலீஸ் உத்தியோகம் பார்க்கறீங்கன்னு எடுத்த எடுப்பிலேயே அவங்ககிட்டே சொல்ல வேண்டாம்... பின்னால பக்குவமா எடுத்துச் சொல்லிக்கலாம்ன்னு நினைச்சிருந்தேன்... ஆனா உங்க அம்மா சொல்லிட்டாங்க...''

''இப்போ அதனால என்ன மிஸ்டர் மகேஷ்... நான் எதுக்கும் கவலைப்படாத ரகம்... அம்மாதான் லேசா கவலைப்பட்டா... நான் அம்மாவை சமாதானப்படுத்திட்டேன்... நீங்க கில்ட்டியா ஃபீல் பண்ண வேண்டாம்...''

''தாங்க்யூ... அப்படின்னா உங்களுக்கு எம் மேல் நிச்சயமா கோபம் இல்லை...''

''நேத்து நடந்ததை நான் நேத்திக்கே மறந்துட்டேன்...''

''இப்பதான் என்னோட மனசு நிம்மதியா இருக்கு... வீட்டுக்குப் போய் எல்லாரையும் சத்தம் போட்டேன்... அவங்களையெல்லாம் ஒரு வழியா கன்வின்ஸ் பண்ணிட்டேன்...''

ப்ரதீபா நிமிர்ந்தாள்.

''கன்வின்ஸ் பண்ணிட்டிங்களா...? எதுக்கு...?''

''உங்களையே கல்யாணம் பண்ணிக்கத்தான்...''

ப்ரதீபா திகைக்க -

அவன் தொடர்ந்தான்.

''பஸ்ஸில் உங்களைப் பார்த்த நிமிஷமே நீங்கதான் என் மனைவின்னு தீர்மானம் செய்து முறைப்படி உங்க வீடு தேடி வந்து பெண் கேட்டப்ப அந்தத் தீர்மானம் உறுதியாயிடுச்சு... இடையில் சின்னத் தடங்கல்... இப்போ அதுவும் சரியாயிடுச்சு... உங்களை எப்படி சமாதானப்படுத்தறதுன்னு கவலையோட இங்கே வந்தேன்... அதுக்கான அவசியமே இல்லாம பண்பட்ட ஒரு பெண்ணா நீங்க நடந்துகிட்டீங்க. கல்யாணத்தை எப்போ வெச்சிக்கலாம்ன்னு உங்க மதர்கிட்டே டிஸ்கஸ் பண்ணி வையுங்க... நான் மறுபடி வீட்டில் வந்து உங்களைப் பார்க்கறேன்...''



ப்ரதீபா பேசவே சந்தர்ப்பம் கொடுக்காமல் அவனே பேசிக் கொண்டு போனான்.

# 7

க்ரீம் நிறத்திலிருந்த பியட் கார் வெண்ணெய்த் துண்டம் போல போர்டிகோவில் வந்து நின்றது.

காரை டிரைவ் பண்ணிக் கொண்டு வந்த கிரிஜா முன் கதவைத் திறந்து கீழிறங்கினாள். ப்யூட்டி பார்லரின் சிக்கன நடவடிக்கையில் அவள் தோளுக்குக் கீழே கேசம் இல்லை. இளநீலநிற நைலக்ஸ் புடவைக்குள் புதைந்திருந்தாள்.

ஹை ஹீல்ஸ் நடை நடந்து போர்டிகோ சுவரில் ஒட்டியிருந்த பெல் சுவிட்சை அழுத்தினாள்.

வீட்டுக்குள் நீளமாய் இசை.

கதவு திறக்க - உள்ளே - பெரிய பெரிய பூக்களாய்ப் பூத்திருந்த மாக்சியில் ப்ரதீபா தெரிந்தாள்.

''ஏய் கிரிஜா... என்னது சர்ப்ரைஸ் விசிட்...? உள்ளே வா...''

வரவேற்பறை சோபாவில் அருகருகே

அமர்ந்தார்கள்.

கிரிஜா காட்பரீசை நீட்டியபடி கேட்டாள்.

''எங்கே லில்லியைக் காணோம்...?''

''அவங்கப்பா கூட ஷாப்பிங் போனா...''

''அப்பா செல்லம் போலிருக்கு...?''

''ஆமா... என்னை விட அவங்கப்பா கிட்டேதான் அவளுக்கு பாசம் ஜாஸ்தி... நான் அவளைத் திட்டுவேன், கண்டிப்பேன்... அதனால என்கிட்டே அதிகம் ஒட்ட மாட்டா...''

''இப்ப குழந்தையிலே அப்படித்தான் இருப்பா...! பெண் பிள்ளைதானே... வளர வளர உன்கிட்டே பாசம் அதிகமாயிடும்...''

''அப்போ நான் அவகிட்டே இருக்க மாட்டேனே...!''

ப்ரதீபா சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் கிரிஜா புன்னகைத்தாள்.

''எவனோட கையிலையாவது பிடிச்சிக் குடுத்துடுவேன்னு சொல்றியா...? அதுவும் வாஸ்தவம்தான்... கல்யாணம் பண்ணி புருஷன் வீட்டுக்கு அனுப்பித்தானே ஆகணும்...''

ப்ரதீபா பேச்சை மாற்றினாள்.

''என்ன சாப்பிடறே... ஹாட்... ஆர் கோல்டு...?''

''நாம ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கறப்ப நீ போட்டுக் குடுப்பியே... உன்னோட ஃபேவரிட் காபி... அதைப் போட்டுக் குடு...''

சிரித்துக் கொண்டே எழுந்தாள் ப்ரதீபா.

''சரி... வா கிச்சனுக்கு போகலாம்...''

''நீ ட்யூட்டி போயிருப்பியோ என்னவோன்னு பயந்துட்டே வந்தேன்...''

''இன்னிக்கு ஆஃப் ட்யூட்டி...''



க்ளாஸ்டு டைல்ஸ் வேய்ந்த சுவர்களோடு இருந்தது கிச்சன். காபி மேக்கரின் ப்ளக்கைச் சொருகி - ஃபில்ட்டரில் அளந்து காபித் தூளைக் கொட்டினாள்.

''வேற வேலையா இந்தப் பக்கம் வந்தியா...?''

கேசங்கள் குலுங்க தலையாட்டினாள் கிரிஜா.

''நோ... நோ..! நான் பர்ப்பஸா இங்கே வந்தேன்...''

''என்ன விசேஷம்?''

''உன்னை இன்வைட் பண்ணறதுக்காக வந்தேன்...''

''எதுக்கு...?''

''நாளைக்கு சாயந்தரம் வினுவுக்கு முதல் பர்த்டே... எல்லாரையும் இன்வைட் பண்ணி க்ராண்டா பண்றோம்... நீ... உன்னோட கணவர்.. லில்லி மூணு பேரும் சாயந்தரம் நாலு மணிக்கெல்லாம் அங்கே ஆஜர் ஆயிடணும்... தெரிஞ்சதா... அவருக்கு அங்கே வேலை இருந்தது... இங்கே வேலை இருந்ததுன்னு சாக்குப் போக்கு சொன்னின்னா... நான் ஒத்துக்கவே மாட்டேன்... ஷாப்பிங் போயிட்டு திரும்பி வர்ற வரைக்கும் வெயிட் பண்ணி வேணாலும் நான் அவர்கிட்டே நேரடியா சொல்லிட்டுப் போறேன்...''

ப்ரதீபாவின் முகம் கணிசமாய்க் கறுத்துப் போயிருந்தது.

சன்னமான குரலில் சொன்னாள்.

''உன்னோட நேரத்தை நீ ஏன் வேஸ்ட் பண்ணறே...?''

''ஏன் அப்படிச் சொல்லறே...?''

''அவர் வரலைன்னா என்ன கிரிஜா...?

நானும், லில்லியும் கண்டிப்பா வர்றோம்...'

''ஊஹூம்...! நான் ஒத்துக்க மாட்டேன்... உன் வீட்டில் நடந்த எல்லா விசேஷங்களுக்கும் என்னோட கணவரை நான் இழுத்துட்டு வந்திருக்கேன்... நீ மட்டும் வந்தின்னா அவர் கோபிச்சுக்குவார்... கிரிஜான்னு ஒரு ஃப்ரண்டு இருக்கறதையே நீ மறந்துடு...''

''ஏய்... என்ன இது... பெரிய வார்த்தையெல்லாம் பேசறே...?''

''பின்னே என்னடி... ஷாப்பிங் முடிஞ்சு உன்னோட வீட்டுக்காரர் வரட்டும்... அவர்கிட்டே நான் பேசிக்கறேன்...''

''நீ நிலவரம் புரியாம பேசிட்டிருக்கே...''

''என்ன நிலவரம்...? என்ன எனக்குப் புரியாமப் போயிடுச்சு...?''

ஓரிரு விநாடி மவுனம் காத்த ப்ரதிபா, மெல்ல விஷயத்தை உடைத்தாள்.

''நேத்திக்குத்தான் டைவர்ஸ் பேப்பர்ல கையெழுத்துப் போட்டேன் கிரிஜா...''

கிரிஜா அதிர்ந்து போய் அவளைப் பார்த்தாள்.

''என்னடி சொல்றே...?''

அவள் நிறுத்தி நிதானமாய் மறுபடியும் சொல்ல - வாடிப்போன முகத்தோடு கன்னத்தில் கையை வைத்தாள் கிரிஜா.

''இப்படி ஒரு ஷாக் குடுக்கறியே ப்ரதிபா...? உங்களுக்குள்ளே என்ன பிரச்னை...?''

''அதையெல்லாம் இப்பப் பேசி என்ன பிரயோஜனம்...? எல்லாம் முடிஞ்சது கிரிஜா... இன்னிக்கு லாயர் பேப்பர்ஸை கோர்ட்டில் குடுத்திருப்பார்... சட்ட பூர்வமா நாங்க பிரியறதுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாயிருச்சு...''



''என்ன பெரிய சட்டம்...? மனசுக்குத்தான் முதல் மரியாதை... சட்டமெல்லாம் அதுக்கப்புறம்தான்... வீம்புக்காக டைவர்ஸ் வாங்கிட்டு... பின்னாடி மனசு மாறி இணைஞ்சவங்களை நான் பார்த்திருக்கேன்...''

''நோ கிரிஜா... இது ஒட்டாத கேஸ்...''

''நீ எப்படி இதுக்கு ஒத்துகிட்டே...? உன்னைத் தேடி வந்து ஆசையாக கல்யாணம் பண்ணிகிட்ட மகேஷ் எப்படி இந்த முடிவுக்கு வந்தார்...?''

''சந்தர்ப்ப சூழ்நிலை அப்படி ஆயிடுச்சு... இதையெல்லாம் நானும் எதிர்பார்க்கலை... அவரும் எதிர்பார்க்கலை...''

''இங்கே பாரு ப்ரதிபா... நீ எதையும் மூடி மறைக்க வேண்டாம்... உங்க ரெண்டு பேருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டதுக்கு என்ன 'காரணம்ன்னு சொல்லு... அதுஎனக்குத் தெரிஞ்சாகணும்...''

''எங்களுக்குள்ளே பிரிவு ஏற்பட்டதுக்கு என்னோட வேலைதான் காரணம்... நான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் வேலை பார்க்கறது அவருக்குப் பிடிக்கலை... வேலையை விடச் சொல்லி ரொம்ப நாளா என்னை வற்புறுத்திக்கிட்டே இருந்தார்... 'லட்சியத்தோடு ஐ.பி.எஸ். தேறி நான் போலீஸ் டிபார்ட்மென்ட்டில் சேர்ந்தது உனக்குத் தெரியும். நான் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு... இவருக்காக நான் எப்படி வேலையை விட முடியும்...? நீயே சொல்லு...''

''உங்களுக்குள்ளே இதைத் தவிர வேற எந்த மனக்கசப்பும் இல்லையே...?''

''இல்லை...''

''இது ரொம்ப அநியாயம் ப்ரதீபா... இதுக்காக டைவர்ஸ்ங்கறதை என்னால ஜீரணிக்கவே முடியலை...''

''வேலையா, புருஷனான்னு நீயே முடிவு பண்ணிக்கோன்னு தீர்மானமா சொல்லிட்டார். அவர் எனக்கு கணவரா வர்றதுக்கு முன்னாலயே நான் போலீஸ் டிபார்ட்மென்ட்டில் சேர்ந்தவ. வேலையை விடறதைத் தவிர வேற எந்தத் தியாகத்துக்கும் நான் தயாராயிருக்கேன்னு சொல்லியும் அவர் கேட்கலை...''

''ஸோ... வேலைக்காக கணவனையே தியாகம் பண்ணற முடிவுக்கு நீ வந்துட்டே...?''

''ஆமா... எனக்கு வேற சாய்ஸ் எதுவும் அவர் தரலை...''

''ப்ரதீபா... நான் பத்தாம் பசலித்தனமா பேசறதா நீ நினைச்சுக்கக் கூடாது. ஒரு பொண்ணு உன்னை மாதிரி உயர்ந்த பதவியிலிருந்தா முகத்துக்கு முன்னால சிரிச்சுப் பேசறவங்க ஆயிரம் பேர் இருப்பாங்க... முதுக்குப் ஜின்னாலயும் அவளைப் பத்தி நல்ல விதமா பேசணும்ன்னா அவளுக்கு நல்ல குடும்பப் பின்னணி இருக்கணும்... சுருக்கமா சொன்னா கணவனோட அரவணைப்பு இருக்கணும்... அதை இழந்துட்டு நீ எவ்வளவு பெரிய பதவியிலிருந்து எவ்வளவு பெரிய சாதனை செஞ்சாலும் அதில் அர்த்தமே இல்லை... ஏன்னா நம்மைச் சுத்தியிருக்கற சமூகம் அப்படிப்பட்டது...''

மெலிதாய்ச் சிரித்தாள் ப்ரதீபா.

''கிரிஜா...! உன்னோட உச்சபட்ச லட்சியமே அன்பான கணவன்... அழகான குழந்தை... அமைதியான குடும்பம்... இவ்வளவுதான்...! உன் கழுத்துல தாலி ஏறின நிமிஷமே அதெல்லாம் ஏறக்குறைய நிறைவேறிடுச்சு... சின்ன வட்டத்துக்குள்ளே சிக்கியிருக்கற சராசரிப் பொண்ணு நீ...! உன்னால ஒரு அளவுக்கு மேல சிந்திக்க முடியாது. நீ இப்படித்தான் பேசுவே... ஆனா எனக்கு வேற மாதிரி லட்சியம். அதுக்கு ஈடு கொடுக்கற கணவரா மகேஷ் இருப்பார்ன்னு நினைச்சேன்... ஆனா அவர் அப்படி இல்லைங்கற பட்சத்தில் நான் என்ன செய்ய முடியும்...?''

''லில்லியோட நிலைமையை யோசிச்சுப் பார்த்தியா...?''

''யோசிச்சுப் பார்க்காம இல்லை...! ஆனா என்ன செய்யறது...! அவ என்கிட்டே வளர்றதும்... அவர் கிட்டே வளர்றதும் கோர்ட்டின் தீர்ப்பைப் பொறுத்த விஷயம்... கோர்ட் எப்படிப்பட்ட தீர்ப்பை வழங்கினாலும் அதை ஏத்துக்க நான் தயாரா இருக்கேன்...''

''ப்ரதீபா... உன்னால எப்படி இப்படியெல்லாம் பேச முடியுது...?''

''ஒரு லட்சியப் பிடிப்போடு இருக்கிற யாருமே என்னை மாதிரிதான் பேசுவாங்க. பேச முடியும்...''

''ப்ரதீபா...''

''இந்தா...! காபி சாப்பிடு...''

## 8

(ப்ளாஷ் பேக்)

ஆப்பிளில் குத்தி வைத்த ஊதுபத்திக் குச்சிகள் மெல்ல மெல்ல உயரம் இழந்து

சாமபலாகிக் கொண்டே காலாவதியாக -

கட்டிலில் பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை சகிதமாய் மகேஷ். அவன் முகம் பொறுமை இழந்திருந்தது. கட்டிலை விட்டு எழுந்து குறுக்கே நடை பயின்றான்.

ஜன்னல் திட்டில் வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை உருவினான். லைட்டரில் தீ நாக்கை எழுப்பி சிகரெட் முனைக்கு உயிர் ஊட்டினான்.

கட்டிலைச் சுற்றித் தொங்கிய மல்லிகைச் சரங்கள் ஃபேன் காற்றில் ஆடின. கட்டிலை ஒட்டியிருந்த ஜன்னல் வழியே பேச்சுக் குரல்கள் கலகலப்பும், உற்சாகமுமாய்க் கேட்டன.

''மாப்பிள்ளை பாவம்... எவ்வளவு நேரம்தான் காத்திருப்பார்... சீக்கிரம் பொண்ணை அனுப்புங்க...''

''இப்போதான் புடவை கட்டவே கூட்டிட்டுப் போறாங்க... பொம்பளைங்க அலங்காரம் பண்ண ஆரம்பிச்சா அவ்வளவு சுலபத்தில் முடிஞ்சிடுமா...?''

அவன் கையிலிருந்த சிகரெட் சாம்பலாகிக் கொட்டும் வரை அவள் வரவில்லை. மிச்ச சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் நசுக்குகிறபோது - வாசலில் நிழலாடியது.

திரும்பிப் பார்க்க -

கையில் பால் சொம்புடன் ப்ரதீபா.

அநாவசிய வெட்கங்கள் இல்லாமல் புன்னகையோடு உள்ளே நடந்து வந்தாள்.

ஸ்டூலின் மேல் சொம்பை வைத்தவள் கேட்டாள்.

''உங்களை ரொம்ப நேரம் காக்க வெச்சிட்டேனா...?''

''பின்னே...''

''சிம்ப்பிளா அலங்காரம் போதும்ன்னு நான் சொன்னா யாராவது கேட்டால் தானே...? வலுக்கட்டாயமா உக்கார வெச்சு மையைத் தீட்டறதும்... சென்ட்டைத் தெளிக்கறதும்... ஒரே அமர்க்களப்படுத் திட்டாங்க...''

''இன்னிக்கு ஒரு நாளைக்கு இப்படித்தான் இருக்கும்.''

ப்ரதீபா அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

ஜன்னலுக்கு வெளியே சளசளவென்று பேச்சுக் குரல்கள். மகேஷ் சலித்துக் கொண்டான்.

''ச்சை...! தனி ரூமுக்குள்ளே இருந்தும் ப்ரைவஸியே இல்லை... கட்டில் கரெக்டா ஜன்னல்கிட்டே இருக்கு. இது எனக்கு ஃபர்ஸ்ட் நைட் மாதிரியே தெரியலை...''

''எவ்வளவு நேரம் பேசுவாங்க... இன்னும் கொஞ்ச நேரம் தானே...?''

''அதுவரைக்கும் காத்திருக்கணுமா...?''

''நீங்க புத்திசாலியா இருந்தா கல்யாணம் முடிச்ச கையோட ஹனிமூன் போறதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கணும்... அங்கே இந்த மாதிரி தொந்தரவுகளெல்லாம் சுத்தமா இருக்காது...''

''ஸ்விஸ் போலாமா... ஹவாய் போலாமா...?''

''பக்கத்திலிருக்கிற கொடைக்கானல் போனா பத்தாது...?''

''கொடைக்கானல் போறதுன்னா இப்பல்லாம் உயிரைக் கையில் பிடிச்சுகிட்டு இல்லே போக வேண்டியிருக்கு...''

''அது கவர்மெண்ட் பஸ்ஸில் போனா...! நாம காரில்தானே போகப் போறோம்...''

பரதபா சொல்லிக் கொண்டிருந்தபோது வெளியே ஒரு ஆண் குரல் கேட்டது.

அந்தக் குரலோடு மரகதம் பேசுவது காதில் விழுந்தது.

ப்ரதீபா சட்டென பேச்சை நிறுத்தி - ஏதோ பேச யத்தனித்த மகேஷைக் கையமர்த்தி விட்டு - அவசரமாய்ச் சொன்னாள்.

''ஒரு நிமிஷம்! ஸ்டேஷன் ஹெட்கான்ஸ் டபிளோட குரல் மாதிரி இருக்கு.''

வெளியே மரகதம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ப்ரதீபாவை முதலிரவு அறைக்குள்ளே அனுப்பி அஞ்சு நிமிஷம் ஆச்சு...''

ஹெட்கான்ஸ்டபிள் தயக்கத்தோடு வார்த்தைகளை உதிர்த்தார்.

''ரொம்ப முக்கியமான கேஸ்... ஆள் யாருன்னு கண்டு பிடிச்சிட்டோம்... அவன் எங்கே இருப்பான்ங்கற விபரம் பிரதீபாம்மாவுக்குத்தான் தெரியும்... காலைல வரைக்கும் தாமதிச்சா... தகவல் கிடைச்சு அவன் தப்பிச்சு ஓட சான்ஸ் இருக்கு...''

''இந்த சமயத்துல எப்படி தொந்தரவு பண்ண முடியும்...? நீங்களே சொல்லுங்க...''

''சரிங்க... நான் கமிஷனர் அய்யாகிட்டே சொல்லிடறேன்... போய்ட்டு வரட்டுங்களா...?''

ப்ரதீபா சட்டென்று கட்டிலினின்றும் எழுந்தாள்.

''ஹெட்கான்ஸ்டபிள் முக்கியமான கேஸ் விஷயமா வந்திருக்கார் போலிருக்கு. நான் என்னான்னு பார்த்துட்டு வந்துடறேன்ங்க...''

மகேஷ் எரிச்சலோடு அவளைப் பார்த்தான்.

''ப்ரதீபா... இது நமக்கு முதலிரவுங்கறது ஞாபகம் இருக்கா...?''

''சரியான காரண காரியம் இல்லாம கமிஷனர் இந்த நேரத்தில் ஆள் அனுப்ப மாட்டார்.''

''எதுக்குமே ஒரு லிமிட் இருக்கு ப்ரதீபா...''

''அந்த லிமிட் கடமைக்கு இல்லை...''

''மனைவிங்கற உறவுக்கு இன்னிக்கு நீ சொந்தக்காரி... அந்த உறவுக்குன்னு சில கடமைகள் இருக்கு... தெரியுமா...?''

''ப்ளீஸ்... என்னோட நேச்சரைப் புரிஞ்சுக்குங்க...! டிபார்ட்மென்ட்டுக்குத் தான் ஃபர்ஸ்ட் ப்ரிபரன்ஸ்... மத்ததெல்லாமே அப்புறம்தான்...! பின்னாடி உங்ககிட்டே வந்து விபரமா சொல்றேன்... கான்ஸ்டபிள் போயிடப் போறார்...''

சொல்லிக் கொண்டே கதவுத் தாளை விலக்கினாள்.

வெளியே இருந்த சொந்த பந்தம் ஆச்சர்யத் தைப் பார்வையில் கொட்டினார்கள்.

ப்ரதீபா கேட்டாள்.

''ஹெட்கான்ஸ்டபிள் எங்கே...?''

''வெளியே பைக்கை ஸ்டார்ட் பண்ணிட்டிருக்கார்...''

''யாராவது உடனே போய் அவரை உள்ளே கூட்டிட்டு வாங்க...''

''நாங்கதான் அவரை அனுப்பிட்டோமே... நீ ஏன்ம்மா வெளியே வந்தே...?''

''ப்ளீஸ்... சொன்னதைச் செய்யுங்க... போய்க் கூட்டிட்டு வாங்க...''

யாரோ முன் வாசலுக்கு ஓடி - பைக்கை உயிர்ப்பித்துக் கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டபிளை கூட்டி வந்தார்கள்.

அவர் வேகவேகமய் உள்ளே வந்தார்.

''முத்தய்யா...! என்ன விஷயம்...?''

''அம்மா... ஹீராலால் விவகாரத்தில் ஜர்தா ஆறுமுகத்து மேல சந்தேகம் உறுதியாகி இருக்கு... அவனோட மூவ்ஸ் பத்தி உங்களுக்குத்தான் நல்லாத் தெரியும். அவனை எங்கே போனா மடக்கலாம்ன்னு ஒரே குழப்பம். கமிஷனர் அய்யாதான் அவனைப் பத்தின டீடெயில்ஸ் வாங்கிட்டு வரச் சொன்னார்...''

ப்ரதீபா சில விநாடிகள் யோசித்துவிட்டு கான்ஸ்ட்பிளை ஏறிட்டாள்.

''ஒரு நிமிஷம் இப்படி உட்கார்ங்க...''

அவர் பெஞ்சில் உட்கார்ந்தார்.

ப்ரதீபா உள்ளே ஓடினாள்.

இரண்டு நிமிஷங்களில் அந்த எக்சிக்யூட்டிவ் டயரியைக் கொண்டு வந்து ட்யூப்லைட் வெளிச்சத்தில் படித்து நிதான மாய் பக்கங்களைப் புரட்டினாள். பின் ஒரு வெற்றுத் தாளில் சில குறிப்புகள் எழுதி கான்ஸ்டபிளின் கையில் கொடுத்தாள்.

''இதுல உள்ள விபரங்கள் டி.ஐ.ஜி.க்குப் புரியும்... கொண்டு போய்க் குடுத்துடுங்க...''

''சரிங்கம்மா...''

விறைப்பாய் ஒரு சல்யூட்டைத் தந்துவிட்டுச் சென்றார் ஹெட்கான்ஸ்டபிள்.

ப்ரதீபா முதலிரவு அறைக்குள் திரும்பவும் நுழைந்தபோது - மகேஷ் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தான். கண்களை மூடியிருந்தான். சுவர் கடிகாரம் முப்பது நிமிஷங்களைக் கரைத்திருந்தது.

''என்னங்க...''

''.....''

''என்னங்க...!''

''.....''

அவனிடமிருந்து பதிலே இல்லை.

அவன் வீம்புக்காக அப்படிப் படுத்திருக்கிறான் என்பதை ப்ரதீபாவால் சுலபமாய்ப் புரிந்துகொள்ள முடிந்தது.

படுக்கையைத் தட்டிவிட்டு - சற்றுத் தள்ளி திரும்பிப்படுத்துக் கொண்டாள்.

## 9

இரண்டு போலீஸ் வேன்கள் அந்த வெட்டவெளி மைதானத்தில் நின்று கொண்டிருக்க - அதற்கு நேர் எதிர் திசையில் கை வைத்த பனியனும், காக்கி பேண்ட்டும் அணிந்த பத்துப் பதினைந்து போலீஸ் காரர்கள் - 'அபவுட் டர்ன்', 'மார்ச் ஃபாஸ்ட்...' என்று அடிவயிற்றிலிருந்து எழும்பிய கட்டளைக்கு இம்மி பிசகாமல் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் கடந்து வராந்தாவைத் தொட்டாள் ப்ரதீபா.

வராந்தாவின் மறுகோடியில் இருந்த கமிஷனரின் அலுவலக அறைக் கதவை மெல்லத் தட்டினாள்.

'டொக்...'

'டொக்...'

கூடவே குரலையும் கொடுத்தாள்.

''மே ஐ கமின் ஸார்...''

''எஸ்...'' என்ற கமிஷனரின் குரலைத் தொடர்ந்து உள்ளே பிரவேசித்தாள்.

நல்ல உயரத்தில் - நிறத்தில் - இருக்கையில் தெரிந்தார் கமிஷனர். அவருக்கு எதிரே ஸ்க்ரிப்ளிங் பேடுடன்... இரண்டு பத்திரிகை

நிருபர்கள்.

கமிஷனர் அவர்களை ஏறிட்டார்.

''இன்ட்டர்வியூவை இத்தோட வைண்ட் அப் பண்ணிக்குவோம்...''

''தாங்க்யூ ஸார்...''

நன்றி சொன்ன நிருபர்கள் விடைபெற்று வெளியேறிச் சென்றார்கள்.

ப்ரதீபா அவர் மேஜையருகே வந்து நின்று சல்யூட் கொடுத்தாள்.

''வாங்க மிஸஸ் ப்ரதீபா'' - சொல்லிக் கொண்டே கமிஷனர் அவளுக்கு நாற்காலியைக் காட்ட - ப்ரதீபா சாய்ந்தாள்.

''ஸார்! நீங்க என்னைக் கூப்பிட்டதா மெஸேஜ்...''

''எஸ்...! வர்ற இருபத்திநாலாம் தேதி பிரான்சிலிருந்து ரெண்டு சயன்டிஸ்ட் இங்கே வர்றாங்க... சயன்டிஃபிக் ஃபீல்டில் அவங்க வெரி வெரி இம்பார்ட்டென்ட் பர்சன்ஸ்... ஒரு செமினாரில் கலந்துக்கறதுக்காக அவங்க வர்றாங்க... ஏர்போர்ட்டில் இறங்கின நிமிஷத்திலிருந்து - திரும்ப விமானத்தில் ஏறும் வரைக்கும் பாதுகாப்பு தரணும்ன்னு அரசாங்கம் இன்ஸ்ட்ரக்ஷன் தந்திருக்கு... அந்தப் பொறுப்பை உங்ககிட்டே தரலாம்ன்னு நான் முடிவு பண்ணியிருக்கேன்...''

''எந்த தேதி வரைக்கும் அவங்க இங்கே இருப்பாங்க ஸார்...?''

''முப்பதாம் தேதி வரைக்கும்...''

''ஒரு சின்ன ரிக்வெஸ்ட் ஸார்...''

''என்ன...?''

''செக்கண்ட் டேயிலிருந்து நான் செக்யூரிடி சார்ஜ் எடுத்துக்கறேன்...''

''ஏன்...?''

''இருபத்திநாலாம் தேதி நான் லீவ்



ஸார்...''

''லீவைக் கேன்சல் பண்ணிடுங்க...''

ப்ரதீபா தயக்கமாய்ச் சொன்னாள்.

''கேன்சல் பண்ண முடிஞ்சிருந்தா நான் உங்ககிட்டே ரிக்வெஸ்ட் பண்ணவே மாட்டேன் ஸார்...''

''எதுக்காக லீவ் போட்டிருக்கீங்கன்னு சொல்லுங்க. லீவைக் கேன்சல் பண்ணலாமா வேண்டாமான்னு நான் சொல்றேன்...''

''அன்னிக்கு நான் கோர்ட்டுக்குப் போகணும் ஸார்...''

''கோர்ட்டுக்கா...! எதுக்கு...?''

''ஒரு பர்சனல் கேஸ் ஸார்...''

''கோர்ட் வரைக்கும் வந்துட்டப்புறம் என்ன பர்சனல்...? என்ன விஷயம்ன்னு சும்மா சொல்லுங்க...''

''கோர்ட்டுக்கு என்னோட டைவர்ஸ் கேஸ் வருது ஸார்...''

''மை குட்னஸ்...!''

கண்களை விரித்து மேஜையின் மேல் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டார்.

ப்ரதீபா தொடர்ந்தாள்.

''இருபத்தி நாலாம் தேதி ஃபர்ஸ்ட் ஹியரிங்... அன்னிக்கு நான் போயாகணும்...''

''நீங்களும் விவாகரத்துக்கு சம்மதிச்சிட்டீங்களா...?''

''கூப்பிட்ட சமயத்தில் கோர்ட்டுக்கு வர சம்மதிச்சிருக்கேன்... கோர்ட் பார்த்து என்ன தீர்ப்பு சொல்லுதோ அதை ஏத்துக்கத் தயாராயிருக்கேன்...''

''உங்களுக்குள்ளே என்ன பிரச்னை...?''

''என்னோட டியூட்டி கான்ஷியஸ்தான் அவரோட முதல் எதிரி... போலீஸ் வேலையை விட்டுடச் சொல்றார்... அதுக்கு நான்

தயாரா இல்லை...''

''குட்... வெரி குட்...! உங்களை மாதிரியான ஆபீஸர்ஸ் ட்யூட்டி மேல இவ்வளவு அக்கறை வெச்சிருக்கறது பாராட்டுக்குரிய விஷயம்... ஐ அப்ரிஷியேட் யூ... புருஷன் இல்லேன்னா என்ன... வாழ முடியாதா...?''

கமிஷனர் சொல்லிக் கொண்டே கையை நீட்டி அவள் தோளைத் தட்டுவதைப் போல் மார்பைத் தொட்டார்.

ப்ரதீபாவுக்குள் கோபம் குபுக்கென்று பீறிட்டது.

''யூ... ராஸ்கல்...''

கையைச் சுழற்றினாள்.

'ர்ரப்...'

கமிஷனரின் அகலமான கன்னத்தில் அவளது உள்ளங்கை இடி மாதிரி இறங்கியது. கர்ஜித்தாள்.

''இனிமே இந்த மாதிரி அநாகரிகமா நடந்துக்க முயற்சி பண்ணினா என்னோட கை பேசாது. கால்ல இருக்கற செருப்புத்தான் பேசும்...''

கமிஷனர் திகைத்துப் போய் உட்கார்ந்திருக்க-

ப்ரதீபா அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட முயல -

சற்று முன்னால் விடைபெற்றுச் சென்ற நிருபர்களில் ஒருவர் இன்னமும் அங்கேயே நின்றிருந்தார்.

கமிஷனரின் முகம் மாறிப் போனது.

நிருபரின் முகத்தில் பரபரப்பு.

அவர் ப்ரதீபாவைப் பார்த்துக் கேட்டார்.

''மேடம்... என்னாச்சு...? கமிஷனரை எதுக்காக அறைஞ்சீங்க...?''

# 10

(ப்ளாஷ் பேக்)

தியேட்டர் நியூ பாரடைஸ்.

ராத்திரி நேர பத்தரை மணி. சோடியம் விளக்கின் வெளிச்சம் சிதறியிருக்க - முகப்பில் ஜனங்கள், டிக்கெட் கவுண்ட்டர்களில் தலைகள் அலை மோதின. தள்ளு வண்டிகளில் சூடாக நடந்து கொண்டிருந்தது வேர்க்கடலை வியாபாரம்.

ஜீப் சாலையில் டயர்களைத் தேய்த்துக் கொண்டிருக்க - ப்ரதீபா டிரைவிங் இருக்கையிலிருந்த கான்ஸ்டபிளைப் பார்த்து சொன்னாள்.

''இங்கேயே ஜீப்பை நிறுத்து...''

அவர் ஸ்டியரிங்கைச் சுழற்றி பிரேக்கை மிதித்தார்.

தியேட்டரின் முன்னால் ஓரமாய் ஒதுங்கி நின்றது ஜீப்.

ஜீப்பை விட்டு இறங்கி - பானட்டின் மேல் முழங்கையை ஊன்றி நின்றாள் பிரதீபா.

சில நிமிஷங்கள் கரைந்த பின் - கான்ஸ்டபிளைக் கூப்பிட்டாள்.

ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டினாள்.

''கான்ஸ்டபிள்... அந்த ரெண்டு பேரையும் இங்கே கூட்டிட்டு வா...''

கான்ஸ்டபிள் தலையை ஆட்டிவிட்டு - கூட்டத்தின் இடையே நுழைந்தார். நுழைந்த வேகத்திலேயே அவர்களைக் கூட்டிக் கொண்டு திரும்பி வந்தார்.

சல்வார் கமீஸ் அணிந்த இரண்டு இளம் பெண்கள் ப்ரதீபாவின் போலீஸ்

யூனிபார்மைப் பார்த்ததால் உண்டான
மிரட்சி கண்களில் படர்ந்திருந்தது. உயர் ரக
பர்ப்யூம் வாசனை இருவரிடமிருந்தும்
குப்பென்று தாக்கியது.

ப்ரதீபா அவர்களை ஏற இறங்கப் பார்த்துக்
கொண்டே கேட்டாள்.

''பேர் என்ன...?''

''சுதா...''

''வித்யா...''

''எங்கே வந்தீங்க...?''

''சி... சினிமாவுக்கு...''

''பார்த்தா காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் மாதிரி
தெரியறீங்க...?''

''அ... ஆமா மேடம்...''

''எந்த காலேஜ்...?''

இருவரில் ஒருத்தி நடுங்கும் குரலில்
காலேஜ் பெயரைச் சொன்னாள்.

''ரெண்டு பேர் மட்டும் தனியாவா
வந்தீங்க...?''

''ஆ... ஆமா...''

''உங்க வீட்ல இதையெல்லாம்
கேக்கறதுக்கு யாருமில்லையா...?''

''நா... நாங்க... ஹாஸ்டல்ல தங்கிப்
படிக்கிறோம்...''

''ஹாஸ்டல் வார்டன் எப்படி
அனுமதிச்சாங்க...?''

''வார்டனுக்குத் தெரியாமதான்
வந்திருக்கோம்...''

அந்தப் பெண் சொல்லி முடித்தபோது -
ப்ரதீபாவின் வலது கை வேகமாய் சுழன்றது.

''ரப்... ரப்...''

இருவர் கன்னங்களிலும் அறை
உஷ்ணமாய் வெடித்தது.

இதை சற்றும் எதிர்பார்க்காத அந்தப்



பெண்கள் கன்னங்களைப் பிடித்துக் கொண்டு
கண்களில் நீரைக் காட்டினார்கள்.

''மேடம்...?''

''திருட்டுத்தனமா செக்கண்ட் ஷோ வந்து
பார்க்கற அளவுக்கு தைரியம் வந்துடுச்சா...?
இந்தத் தியேட்டர் வாசலில் எத்தனை
ரவுடிகள், எத்தனை பொறுக்கிப் பசங்க
சுத்தறாங்கன்னு உங்க ரெண்டு பேர்க்கும்
தெரியுமா...? ஆம்பளைங்களைக் கிறங்
கடிக்கற மாதிரி அலங்காரம் பண்ணிகிட்டு,
சென்ட்டை அள்ளித் தெளிச்சிக்கிட்டு அர்த்த
ராத்திரில கிளம்பி வந்துடறது... அப்புறம்
கையைப் பிடிச்சி இழுத்துட்டான்...
கற்பழிச்சிட்டான்னு கதறி ஸ்டேஷன்ல வந்து
எங்களுக்குத் தலைவலி குடுக்கறது...!
ஜீப்புல ஏறுங்கடி ரெண்டு பேரும்...''

ப்ரதீபாவின் உறுமலில் சர்வ
அவயவங்களும் நடுங்கிப் போய் - ஜீப்பில்
ஏறினார்கள்.

''கான்ஸ்டபிள்... ஜீப்பை ஸ்டார்ட்
பண்ணு...''

அவர் ஜீப்பை சுற்றி வந்து டிரைவிங்
இருக்கையில் அமர்ந்தார். இக்னீஷியன்
சாவியைத் திருக - இரவு நேர குளிரில் சிறிது
அடம் பிடித்து விட்டு உயிர் பெற்றது ஜீப்.

பிளாஸ்டிக் பட்டையைப் பற்றிக் கொண்டு
பக்க வாட்டு இருக்கையில் ஏறி உட்கார்ந்தாள்
ப்ரதீபா.

அந்தப் பெண்கள் குரல் தழுதழுத்தார்கள்.

''மேடம்... நாங்க டீசன்ட்டான
குடும்பத்தைச் சேர்ந்தவங்க... இதுநாள்
வரைக்கும் போலீஸ் ஸ்டேஷன் வாசலையே
மிதிச்சதில்லை... போலீஸ் ஜீப்புல நாங்க
ஏறினோம்னு தெரிஞ்சாலே கிராமத்தி

விருக்கற எங்க பேரன்ட்ஸ் அவமானத்தில செத்துப் போயிடுவாங்க...''

மற்றொரு பெண் அழுகையோடு கும்பிட்டாள்.

''எங்களை இங்கேயே இறக்கி விட்டுடுங்க... நாங்க நேரா ஹாஸ்டலுக்குப் போயிடறோம்... தயவு செஞ்சு போலீஸ் ஸ்டேஷன்க்கு எங்களைக் கூட்டிட்டுப் போக வேண்டாம் மேடம்... நீங்க குடுத்த அறையை வாழ்நாள் பூராவும் நாங்க மறக்க மாட்டோம்... வாழ்க்கையில் இன்னொரு முறை செக்கண்ட் ஷோங்கறதை நினைச்சுக்கூடப் பார்க்க மாட்டோம்...''

ப்ரதீபா திரும்பிப் பார்த்து மெலிதாய்ப் புன்னகைத்தாள்.

''நிஜமாவா...?''

''மேடம்... ப்ளீஸ்... எங்களை இங்கேயே இறக்கி விட்டுடுங்க... நாங்க ஒரு ஆட்டோ பிடிச்சி ஹாஸ்டலுக்குத் திரும்பிப் போயிடறோம்...''

''இன்னொரு விஷயத்தையும் நீங்க உணரணுமே...''

''எ... என்ன விஷயம்...?''

''வார்டனுக்குத் தெரியாம ஹாஸ்டலை விட்டு திருட்டுத்தனமா வெளியே வந்தது தப்பில்லையா...?''

''தப்புத்தான் மேடம்...''

''மறுபடி நீங்க அந்தத் தப்பையும் செய்யாம இருக்கணும்ன்னா... உங்களை இப்போ நான் ஹாஸ்டல் வார்டன் கிட்டேயே கொண்டு போய் ஒப்படைக்கணும்...''

அவர்கள் இருவரும் வெலவெலத்துப் போய்ப் பார்க்க - ப்ரதீபா தொடர்ந்து



சொன்னாள்.

''ஸோ... இப்போ நான் உங்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போகலை... உங்களோட ஹாஸ்டலுக்குத்தான் கூட்டிட்டுப் போறேன்...''.

ஜீப் இரவுச் சாலைகளில் பதினைந்து நிமிஷங்கள் ஓடி அந்த லேடீஸ் ஹாஸ்டலின் முன்னால் நின்றது.

கேட் வாட்ச்மேன் போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் பதட்டத்தோடு கதவை லேசாய் விரித்தான்.

ஜீப்பிலிருந்து ஹாஸ்டலைச் சேர்ந்த பெண்கள் இறங்கு வதைப் பார்த்ததும் முகம் மாறினான்.

''ஹாஸ்டல் வார்டன் எங்கே...?'' என்று கேட்டுக் கொண்டே அந்தப் பெண்களோடு உள்ளே சென்றாள் ப்ரதீபா.

பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பின் மீண்டும் ஜீப்புக்கு வந்தாள். இருக்கையில் அமர்ந்தாள்.

''போகலாம்...''

''எங்கேம்மா...?''

''வீட்டுக்குத்தான்...''

ஜீப் துடைத்து வைத்த சாலைகளை விழுங்க ஆரம்பித்தது. ஜீப் டிரைவர் ஸ்டியரிங்கை கையாண்டு கொண்டே பேசினார்.

''மேடம்... நான் அதிகப்பிரசங்கித்தனமா பேசறேன்னு நினைச்சுக்காம இருந்தீங்கன்னா உங்ககிட்டே ஒரு கேள்வி கேக்கலாமா...?''

அவள் திரும்பினாள்.

''என்ன கேக்கப் போறே...?''

''நான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து

மூணு வாரம்தான் ஆகுது. இந்த மூணு வாரத்தில் ஒரு விஷயத்தை உங்ககிட்டயிருந்து நான் தெரிஞ்சுகிட்டேன்.''

''என்ன விஷயம்...?''

''என்னோட சர்வீஸ்ல நான் பார்த்த மேலதிகாரிகள் எல்லாரும் டியூட்டி முடிஞ்சா நேரா வீட்டுக்குப் போறதைத்தான் பார்க்கறேன்... ஆனா நீங்க மட்டும் கொஞ்சம் வித்தியாசப்படறீங்க...''

''எப்படி...?''

''ட்யூட்டி முடிஞ்சதும் நீங்க சிட்டியை ஒரு தடவை ரோந்து வர்றீங்க... பொது ஜனங்களில் யாராவது அஜாக்கிரதையா இருக்கறதைப் பார்த்தா அந்த நிமிஷமே அவங்களைக் கூப்பிட்டு கண்டித்து உரிய முறையில் அவங்களைத் திருப்பி அனுப்பறீங்க...''

ப்ரதீபா புன்னகைத்தாள்.

''சர்வீஸ்ல சேர்ந்த நாளில் இருந்து இதை என்னோட தினசரி கடமையா வெச்சிருக்கேன்... ஏன்னா... போலீஸ் ஸ்டேஷனுக்கு வர்ற நூத்துக்கு தொண்ணூறு கேஸ்கள், குற்றவாளிகளின் சாமர்த்தியத்தை விட பொது ஜனங்களின் அஜாக்கிரதையாலும், அலட்சியத்தாலும்தான் நடந்திருக்கு... குற்றங்கள் நடப்பதில் தங்களோட பங்கு என்னன்னு குறைந்த பட்சம் தினமும் ஒருத்தருக்காவது புரிய வெச்சா குற்றங்களின் சதவீதம் கொஞ்சமாச்சும் குறையும்ங்கறது என்னோட அசைக்க முடியாத நம்பிக்கை... அதனால நான் அரை மணி நேரமோ... ஒரு மணி நேரமோ லேட்டா வீட்டுக்குப் போறதைப் பெரிசா எடுத்துக்கறதில்லை...''

ஜீப்பைக் கையாண்டு கொண்டிருநத கான்ஸ்டபிள் பிரமித்தார்.

''மேடம்... மனசைத் திறந்து நான் சொல்றேன்... 'எல்லோரும் ஆஹா... ஓஹோன்னு புகழறாங்களே... இந்தப் பொம்பளைக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு...!' - இங்கே டிரான்ஸ்ஃபர் ஆகி வர்றதுக்கு முன்னால இப்படித்தான் நான் நினைச்சேன்...! உங்களை ஏன் இப்படிப் புகழறாங்க... அந்தப் புகழுக்குப் பின்னால எவ்வளவு கடுமையான உழைப்பு இருக்கு... இதையெல்லாம் இன்னிக்குத்தான் நான் புரிஞ்சுகிட்டேன்.''

ப்ரதீபா பெரிதாய் சிரித்தாள்.

''உன்னைச் சொல்லித் தப்பு இல்லை... ஒரு பொண்ணு சாதிக்க ஆரம்பிச்சாள்னா ஆம்பிளைங்களுக்கு பொறாமை. எப்படி எல்லாம் அவளைக் கவிழ்க்கலாம்ன்னு திட்டம் போட ஆரம்பிச்சிடறாங்க... பாராட்டறதுக்குப் பதிலா வசை பாட ஆரம்பிச்சிடறாங்க...''

''பெண்கள் போலீஸ் வேலைக்குத் தகுதியில்லாதவங்கன்னு இப்பக்கூட பேசறாங்க மேடம்...''

''அதெல்லாம் மாறிட்டு வருது... அந்தப் பத்தாம் பசலித்தனமான பேச்சை எல்லாம் பொருட்படுத்தாத எங்களை மாதிரிப் பெண்கள் மாத்திட்டு வர்றோம்... திறமை யார் கிட்டே இருந்தாலும் மதிக்கணும்ங்கற மனோபாவத்துக்கு ஆண்களும் வேற வழியில்லாம மாறிட்டு வர்றாங்க...''

ஜீப் அந்தக் கிளைத் தெருவுக்குள் புகுந்தது.

தெரு நிசப்தமாய் இருக்க -

செவ்வக சைசில் க்ரானைட் கல் பதித்த

அந்த வீட்டின் முன்னால் இயக்கத்தை நிறுத்தியது.

இறங்கிக் கொண்டு தலையசைத்தாள்.

''நீ போகலாம்... காலைல சரியா எட்டு மணிக்கெல்லாம் இங்கே வந்துடு...''

''எஸ்... மேடம்...''

பின்புறம் சிவப்பு விளக்கை காட்டிக் கொண்டு டீசல் மணத்தோடு ஜீப் மறைய ப்ரதிபா - காம்பவுண்ட் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள்.

காலிங்பெல் சுவிட்சை அழுத்தப் போனவள் - கதவு வெறுமனே சாத்திக் கிடப்பதை உணர்ந்து - தள்ளினாள்.

மங்கலான ஜீரோ வாட் வெளிச்சத்தில் சோபாவின் மேல் மகேஷ் உட்கார்ந்து இருப்பது அவுட்லைன் உருவமாய்த் தெரிந்தது. முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு பேசினான்.

''நானும் இந்த ஒரு மாசமா பார்த்துட்டேன்... ஒரு நாள் கூட பத்து மணிக்கு முன்னால நீ வீடு திரும்பலை...''

ப்ரதீபா அவனருகே அமர்ந்தாள்.

''என்னோட வேலை அந்த மாதிரி...!''

''கொஞ்சம் சீக்கிரமா வரக்கூடாதா...?''

''பி மெச்சூர்டு...! பெண்டாட்டியோட ஜாப் நேச்சரைப் புரிஞ்சுகிட்டு கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி நடந்துக்க வேண்டியதுதான்...''

''உன்னோட நேச்சர் ஆஃப் ஜாப் எனக்குத் தெரியும்... நான் விசாரிக்க வேண்டிய வங்ககிட்டே விசாரிச்சுத் தெரிஞ்சுகிட்டேன்... நீ நினைச்சா ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து சேர்ந்துடலாம்... ஆனா... இந்தப் பொது மக்களோட பாதுகாப்பையெல்லாம் நீ ஒருத்திதான் குத்தகைக்கு எடுத்துகிட்ட மாதிரி ஊரைச் சுத்திட்டுதான் நீ வீடு வந்து சேர்றே... அதையெல்லாம் கேக்காம நான் அட்ஜஸ்ட் பண்ணிப் போய்க்கணுமா...?''

ப்ரதீபா அவனை நேருக்கு நேர் பார்த்தாள்.

''இங்கே பாருங்க... நான் கொஞ்சம் வித்தியாசமானவ... எல்லாரும் போற பாதையில் ஆட்டு மந்தை மாதிரி நான் போகத் தயாரில்லை... அந்த வித்தியாசமான குணத்தாலதான் அன்னிக்கு பஸ்ஸில் உங்க கவனத்தைக் கவர்ந்தேன். இப்போ அந்தக் குணத்தை நீ மாத்திக்கோன்னு சொன்னா என்னால எப்படி மாத்திக்க முடியும்...? நான் போலீஸ் வேலை பாக்கறேன்னு தெரிஞ்சதும் உங்க சொந்தக்காரங்க எல்லாரும் வேண்டாம்ன்னு போயிட்டாங்க... நீங்க தீர்க்கமா யோசிச்சு முடிவெடுக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைச்சது... அப்பவும் நீங்க வலிய என்னோட ஆபீஸுக்கு வந்து பார்த்து உன்னையே கல்யாணம் பண்ணிக்கறேன்னு பிடிவாதமா சொன்னீங்க...! இப்போ கல்யாணமான ஒரே மாசத்தில் குறை சொன்னா என்ன அர்த்தம்...? என்னோட நாலு வருஷ ரொட்டீனை என்னால மாத்திக்க முடியாது... அதை நீங்க தெளிவாய் புரிஞ்சிக்கணும்...'' - சொல்லி விட்டு -

மகேஷின் முறைப்பை லட்சியம் செய்யாமல் எழுந்து உடை மாற்ற உள் அறைக்குள் போனாள் ப்ரதீபா.

# 11

டெலிபோன் தீவிரமாய் முணு முணுத்தது.

ரிசீவரைக் கையிலெடுத்தாள் ப்ரதீபா.

''ஹலோ...''

மறு முனையிலிருந்து சின்னத் தயக்கத்துக்குப்பின் - குரல் ஒலித்தது.

''கமிஷனர் ஸ்பீக்கிங்...''

ப்ரதீபா இறுக்கமானாள்.

''சொல்லுங்க ஸார்...''

''நான் கேள்விப்பட்டது நிஜம்தானா...?''

''என்ன கேள்விப்பட்டீங்க...?''

''இன்னிக்கு டி.வி.ல பேட்டி குடுக்கப் போறீங்களாமே...?''

''ஆமா... பேட்டி எடுக்கறதா சொல்லியிருக்காங்க... இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்துடுவாங்க...''

''வேண்டாம் ப்ரதீபா... பேட்டியெல்லாம் வேண்டாம்...''

''இந்தப் பயம் அந்த அநாகரிகமான காரியத்தை செய்யறதுக்கு முன்னால இருந்திருக்கணும்... , உயர்ந்த பதவியிலிருக்கறவங்க அந்தப் பதவிக்கே உரிய நாகரிகத்தோட நடந்துக்கணும்... கீழே வேலை செய்யற பெண்கள் கிட்டே எப்படி வேணா நடந்துக்கலாம்ங்கற மனோபாவம் உங்களோட ஒழிஞ்சு போகணும்... அதனாலதான் நான் டி.வி. போட்டிக்கு சம்மதிச்சேன்...''

''ப்ரதீபா... நாலு சுவருக்குள்ளே நடந்த விஷயத்தை நீங்க அநாவசியமா வெளிச்சத்துக்கு கொண்டு வர்றீங்க...''

''நாலு சுவருக்குள்ளே நடக்கற விஷயம்தானே... இவளாலே வெளியே சொல்ல முடியாது... சொன்னாலும் எதுவுமே நடக்கலைன்னு ஒரேயடியா மறுத்துடலாம்ன்னு நினைச்சிருந்திருப்பீங்க... அந்தப் பத்திரிகை நிருபர் அறைக்குள் எட்டிப் பார்த்து உங்க நினைப்பில் மண்ணை அள்ளிப் போட்டுட்டார்...''

''ப்ரதீபா... அந்த நிருபரை சாட்சியா வெச்சு... நீங்க என்னோட சுப்பீரியர்ஸ் கிட்டே விஷயத்தைக் கொண்டு போயிட்டீங்க... அவங்க முறைப்படி ஆக்ஷன் எடுக்கப் போறாங்க. இடையில டி.வி. பேட்டியெல்லாம் எதுக்கு...? டிபார்ட்மென்ட் பிரச்னைய வெளியே கொண்டு போறது சரியில்லை...''

''டிபார்ட்மென்ட்டில் என்ன ஆக்ஷன் எடுப்பாங்க...? 'ஷோகாஸ்' நோட்டீஸ் தருவாங்க... நீங்க இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கற மாதிரி அந்த சம்பவத்துக்கு புதுசா ஏதாவது காரணத்தை சிருஷ்டிச்சு தன்னிலை விளக்கம் தருவீங்க... அதை நம்பி உங்களை தண்ணி தெளிச்சு விட்டாலும் விடலாம்... அல்லது... ஒன் டே சஸ்பென்ஷன்னோ... எனக்கு மன்னிப்புக் கடிதம் எழுதவோ சொல்லலாம்... இதெல்லாம் உங்களுக்கு உறைக்கவே உறைக்காது... காலர்ல விழுந்த தூசைத் தட்டி விடற மாதிரி தட்டி விட்டுட்டுப் போயிட்டே இருப்பீங்க...! அதனால டி.வி. பேட்டிதான் சரி... உங்க மனைவியோடு உங்க வீட்டைச் சேர்ந்தவங்க அத்தனை பேரும் பார்த்து ரசிக்கட்டும்...''

''நான் வேணா உங்ககிட்டே பர்சனலா மன்னிப்புக் கேட்டுக்கறேன் ப்ரதீபா...''

''ஸாரி ஸார்... ஒரு திருடனோ... கொலைகாரனோ... தப்பை செஞ்சிட்டு 'மன்னிச்சிடுங்க ஸார்... தெரியாமப் பண்ணிட்டேன்'னு சொன்னா... நாம விட்டுட முடியுமா...? அதே மாதிரித்தான் இதுவும்... உப்பைத் தின்னவன் தண்ணி குடிச்சே ஆகணும்...''

சமாதானக் குரலில் கமிஷனர் மேலும் ஏதோ சொல்ல வர - ப்ரதீபா தொடர்பைத் துண்டித்தாள்.

அதே விநாடி -

வாசலில் வேன் சத்தம்.

தலையை நீட்டி ஜன்னலில் பார்த்தாள்.

தனியார் தொலைக்காட்சி நிலைய வேன் போர்டிகோவில் வந்து நின்றிருந்தது.

வேனுக்குள்ளிருந்து சுறுசுறுப்பாய் இறங்கிய பணியாளர்கள் ஆளுக்கொரு டெக்னிகல் சங்கதிகளைக் கையிலெடுத்துக் கொண்டு ஹாலுக்குள் பிரவேசித்தார்கள். பிரதம நிருபர், ப்ரதீபாவை அணுகிக் கேட்டார்.

''ஹால்லயே பேட்டியை வெச்சிக்கலாமா மேடம்...?''

''தாராளமா...''

அவர் உத்தரவுகள் தர ஆங்காங்கே ஃப்ளாஷ் லைட்கள் நிறுத்தப்பட்டன. காமிராமேன் ஹாலைச் சுற்றி வந்து பார்த்து லைட்டிங் கோணங்களை மாற்றி வைக்கச் சொன்னார்.

சோபாவின் மேல் சூரியப் பிரகாசம் விழுந்தது.

ப்ரதீபாவை அதில் உட்காரச் சொல்லி விட்டு பக்க வாட்டில் நிருபர் உட்காாநது கொண்டார்.

காமிரா ஓடத் துவங்கியது.

ஒரு சிறிய அறிமுக உரைக்குப் பின் நிருபர் கேள்வியைத் துவக்கினார்.

''போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் நீங்க... சாதனைக்குரிய பெண்ணாய் விளங்கறது சந்தோஷமான விஷயம்... ஆனா... இந்தத் துறையில் பெண்கள் சேர்றதைப் பத்தி யோசிக்க வேண்டிய நிலைமை இப்போ உருவாகியிருக்கு போலிருக்கே...?''

''ஏன் அப்படிச் சொல்றீங்க...?''

''கமிஷனர் நடத்தை குறித்து நீங்க கோர்ட்டில் வழக்குத் தொடரப் போறதா கேள்விப்பட்டோம்...''

தலையசைத்தாள் ப்ரதீபா.

''எஸ்...''

''உங்ககிட்டே தனி அறையில் மோசமா நடந்து கிட்டாரா...?''

''உங்க கேள்வி ரொம்ப எக்ஸாக்ரேட் பண்ற மாதிரி இருக்கு... கமிஷனர் சின்னதா மிஸ் பிஹேவ் பண்ணினார். ஆனா... அதை அலட்சியமா விட்டா ரொம்ப மோசமா நடந்துக்கறதுக்கு தைரியம் கொடுத்த மாதிரி ஆயிடும்... அதனாலதான் இதை லேசில் விடக்கூடாதுன்னு நான் தீர்மானிச்சேன்...''

''கமிஷனர் என்ன பண்ணினார்...?''

''அறைக்குள்ளே யாருமில்லைங்கற தைரியத்தில் என்னோட மார்பில் கை படற மாதிரி நடந்து கொண்டார்...''

''நீங்க எப்படி ரியாக்ட் பண்ணினீங்க...?''

''தப்பு செஞ்சது யாராயிருந்தாலும் எனக்குப் பயமில்லை... உடனே அவரை நான் அறைஞ்சிட்டேன்...''

''நாலு சுவருக்குள்ளே நடந்த இந் விஷயம் எப்படி வெளிச்சத்துக்கு வந்தது...?''

''நான் அவர் மேல கேஸ் போடணும்னு நினைச்சிருந்தேன்... அப்படிப் போட்டிருந்தா அதை உடைக்க அவர் பல வழிகளிலும் முயற்சி செஞ்சிருப்பார்... அதுக்கெல்லாம் வழியில்லாம கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவரைப் பேட்டி கண்ட நிருபர்களில் ஒருத்தர் தன்னோட ஹேண்ட் பேகை மறந்து வெச்சிட்டதால திரும்ப வந்தார்... நடந்த சம்பவத்தை அவர் பார்த்துட்டார்... நான் துணிச்சலா நின்னதால விவகாரத்தை அவர் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துட்டார்...''

காமிரா கோணங்கள் மாறி மாறி இருவரையும் விழுங்க ஆரம்பித்தது.

ஏறக்குறைய ஒரு மணி நேரப் பேட்டி.

பேட்டி முடிந்து நன்றி சொல்லி விடைபெற்றார்கள். ஃப்ளட் லைட் ஸ்டாண்டுகளும், இதர உபகரணங்களும் துரிதகதியில் வேனுக்குள் சரணடைந்தன. நிமிஷங்களில் இடம் காலியானது.

வேன் போர்டிகோவை விட்டு விலகிச் செல்ல - தூண் அருகே கையைக் கட்டி மகேஷ் நின்றிருந்தான்.

''நீங்க... எப்போ... வந்தீங்க...?''

''கமிஷனர் உன்னோட மார்பில் கை வைத்தார்னு நீ பேட்டி குடுத்துட்டு இருந்தியே அப்பவே வந்துட்டேன்...''

''வர்ற ஞாயிற்றுக்கிழமை இந்தப் பேட்டி ப்ரைவேட் சானல்ல ஒளிபரப்பாகப் போகுது...''

''அன்னிக்குத்தான் நம்ம குடும்பத்து மானம் ஸாட்லைட் வழியா காத்துல பறக்கப்



பாகுதுன்னு சொல்லு...''

''என்ன இப்படி சொல்றீங்க...?''

''பின்னே எப்படிச் சொல்றது...? ற்கெனவே பத்திரிகை பத்திரிகையா போஸ் தடுத்து வெக்கமில்லாம இந்த விஷயத்தை ம்பட்டம் அடிச்சிட்டே... இப்போ அடுத்த ரவுண்ட் டி.வி.யில வரப் போறே...! பப்ளிசிட்டி கிடைக்கறதுக்கு எத்தனையோ வழி இருக்கு... நீ தேர்ந்தெடுத்திருக்கிற வழி ரொம்ப சீப்பானது...''

''பப்ளிசிட்டிக்காக இதை நான் செய்யலைங்க...''

''அப்படின்னா வர்ற ஞாயிற்றுக்கிழமை இந்தப் பேட்டியை ஒளிபரப்ப வேண்டாம்னு டி.வி. காரங்ககிட்டே சொல்ல முடியுமா...?''

''பேட்டியை ஒளிபரப்ப வேண்டாம்னு சொல்லணுமா...?''

திகைப்போடு ப்ரதீபா கேட்க - அவன் சிரித்தான்.

''ஆமா... இப்படி ஒரு பேட்டி ஒளிபரப்பாகறதில் எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை... ஆனா என்னோட இஷ்டத்தை என்னிக்கு நீ மதிச்சிருக்கே...? அப்படி மதிக்கறவளா இருந்தா விவாகரத்து பேப்பர்களில் கையெழுத்துப் போட்டு இருப்பியா...? புருஷனை கவனிக்கறதை விட சீப் பப்ளிசிட்டிகளில் அக்கறை காட்டறதுதான் உனக்கு முக்கியம்... இந்த ஜென்மத்தில் யாராலும் உன்னைத் திருத்தவே முடியாது...''

நெருப்பாய் வார்த்தைகளை வீசிவிட்டு - சாவகாசமாய் வீட்டுக்குள் நடை போட்டான் மகேஷ்.

# 12

(ப்ளாஷ் பேக்)

ஜி.ஹெச்..

'இது உங்கள் மருத்துவமனை. இதை சுத்தமாக வைத்திருக்க எங்களுக்கு உதவுங்கள்' என்ற ஸ்டென்சில் அறிவிப்பு ஆஸ்பத்திரியின் அத்தனை அழுக்கு சுவர்களிலும் அச்சாகியிருந்தது.

பரபரப்பைத் தத்தெடுத்தவர்கள்... ஸ்ட்ரெச்சரில் போகும் அபாய நோயாளியைப் பற்றிய கவலை இல்லாமல் வராந்தா ஓரமாய் நின்று ஜோக் அடித்துச் சிரிக்கும் விசிட்டர்கள்... பஞ்சடைந்த கண்களோடு சூன்யத்தை வெறிப்பவர்கள்... என்று எல்லா ரகங்களிலும் மனிதர்களைப் பார்க்க முடிந்தது.

ப்ரதீபா டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தாள். மறுமுனையில் எஸ்.பி.

''ஜி.ஹெச்சில் இருந்துதான் பேசறேன்...''

''போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சதா...?''

''டாக்டர்ஸ் எல்லாருமே ரொம்ப பிசியா இருக்காங்க ஸார்...''

''போஸ்ட் மார்ட்டம் பண்ணறப்போ நீ பக்கத்திலேயே இரு ப்ரதீபா... இல்லைன்னா டாக்டர்ஸ் ஏனோதானோன்னு போஸ்ட் மார்ட்டம் பண்ணிக் குடுத்துடுவாங்க...''

''அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன் ஸார்.''

''வேற விஷயம் ஏதாவது இருக்கா?''

''ஒரு நிமிஷம் ஸார்... நான் உங்ககிட்டே



சொன்ன மாதிரி... பி.எம். முடிஞ்சதும் நேரா வீட்டுக்குப் போயிடறேன்.''

''ரிப்போர்ட்?''

''ரிப்போர்ட்டை கான்ஸ்டபிள்கிட்டே தந்தனுப்பறேன்...''

''நீ பர்மிஷனோ, லீவோ கேக்கறது அபூர்வமான விஷயம்... ரிப்போர்ட் என் கைக்குக் கிடைக்க ஏற்பாடு பண்ணிட்டு நீ போகலாம்...''

''தாங்க்யூ ஸார்... நான் டயத்துக்கு வீடு திரும்பறதில்லைன்னு என் மேல என் ஹஸ்பெண்டுக்குக் கோபம்... வீக் எண்டில் கொஞ்சம் நேரத்தில் வர்றேன்... வெளியே போகலாம்ன்னு ப்ராமிஸ் பண்ணியிருந் தேன்... கரெக்ட்டா இந்த போஸ்ட் மார்ட்டம் கேஸ் வந்து சேர்ந்துடுச்சு...''

''ரிப்போர்ட்டை அனுப்பி வெச்சுட்டு நீங்க போகலாம்.''

மறுமுனை கவிழ்க்கப்பட ப்ரதீபாவும் ரிசீவரைச் சாத்தினாள். அதே விநாடி டாக்டர் கமலக்கண்ணன் வந்து சேர்ந்தார்.

''ஷல் வீ மூவ் டு மார்ச்சுவரி...?''

''எஸ் டாக்டர்...''

ஆஸ்பத்திரியின் ஒரு கோடியில் இருந்த மார்ச்சுவரி அறையைத் தொட்டார்கள்.

எங்கிருந்தோ வேகமாய் ஓடி வந்த சிப்பந்தி கதவைத் திறந்து விட்டான். பீடி வாசம் குப்பென்று நாசியை ஊடுருவியது.

''உள்ளே எத்தனை பாடி இருக்கு?''

''ஒன்பது! இன்னிக்கு எதை பி.எம். பண்ணப் போறீங்க டாக்டர்?''

''ஊத்துக்குளி ஸ்கூட்டர் ஆக்சிடெண்ட்...''

''பாடி ரொம்ப மோசமான நிலைமையில்

இருக்கு... டாக்டர்.''

''பாடி எந்த நிலைமையில் இருந்தாலு
போஸ்ட் மார்ட்டம் சரியா பண்ணியாகணு
பாடியை எடுத்து சரியா கிடத்து.''

டாக்டர் அட்டெண்டரிடம் சொல்
விட்டு ப்ரதீபாவிடம் திரும்பினார்.

''மிஸஸ் ப்ரதீபா! இங்கே வர்ற போலி
அதிகாரிகள் டெட் பாடியோட ஸ்மெல்லுக்
பயந்து வெளியேயே நின்னுப்பாங்க
கர்ச்சீப்பை மூக்குல பொத்திட்
பக்கத்திலேயே நின்னு போஸ்ட் மார்ட்ட
பண்ணி வாங்கிட்டுப் போறது... எனக்கு
தெரிஞ்சு நீங்கதான்!''... டாக்டர் சொல்
ப்ரதீபா புன்னகைத்தாள்.

''நான் அட்டெண்ட் பண்ணற விவகார
களில் எந்தத் தப்பு நடந்தாலும் அதுக்
முழுக்க நான்தான் பொறுப்பேத்துக்கணும்.
சின்னச் சின்ன அசௌகரியங்களுக்காக நா
ஏன் தப்பு நடக்க இடம் கொடுக்கணும்...
கோர்ட்டுல எங்களுக்காக வக்காலத்
வாங்கப் போறது போஸ்ட் மார்ட்ட
ரிப்போர்ட் தான்... அதை கரெக்ட்ட
வாங்கலைன்னா குற்றவாளி சட்டத்தின் சந்
பொந்துகளில் சுலபமா தப்பிச்சு
போயிடுவான். அவனைப் பிடிக்க நாங்
பட்ட பிரயத்தனமெல்லாம் மயிரிழை
அஜாக்கிரதையில் விரயமாயிடும்...''

''யூ... ஆர் கரெக்ட்... மிஸஸ் ப்ரதிபா...''

ஏசி செய்யப்பட்ட அடுக்கறைகளி
உடல்கள் மல்லாந்து கிடந்தன. சி
அறைகளைத் திறந்து பார்த்து விட்டு பி
அந்த உடம்பைத் தூக்கி மேஜை மே
போட்டான் அட்டெண்டர்.

தலையையும், உடம்பையும் இறுகப்



போர்த்தியிருந்த துணியை அவிழ்த்தான். நொதநொதத்துப் போன உடம்பு கறுத்துப் போன தோலோடு வெளிப்பட்டது.

பார்மலின் வாசத்தையும் மீறி நெடி சட்டென்று காற்றில் பரவ ஆரம்பித்தது. ப்ரதீபாவின் வலது கை அவளையும் அறியாமல் கர்ச்சீப்பை எடுத்து மூக்கிற்குக் கொண்டு போனது.

கத்தியையும், மரச்சுத்தியலையும் வாங்கிக் கொண்டு கமலக்கண்ணன் தன்னுடைய பங்கை ஆரம்பித்தார்.

இடையிடையே குறிப்புகள் எடுத்துக் கொண்டார்.

சரியாய் நாற்பது நிமிஷங்கள்.

மார்ச்சுவரியை விட்டு வெளியே வந்தார்கள்.

கன்சல்ட்டிங் அறையைத் தொட்டு டெட்டால் சோப்பினால் கைகளை அலம்பிக் கொண்டு, இருக்கையில் அமர்ந்தார் டாக்டர்.

ரோனியோவில் உருட்டப்பட்ட பி.எம். காகிதத்தில் கோடிட்ட இடங்களை நிரப்பிக் கையெழுத்தைப் போட்டு -

ரிப்போர்ட்டைக் கவரில் போட்டுக் கொடுத்தார். ப்ரதீபா அதை வாங்கிக் காத்திருந்த கான்ஸ்டபிளிடம் ஒப்படைத்து விட்டு ஆட்டோ பிடித்தாள்.

சாலைகளில் வேகமாய் ஓடிய ஆட்டோ வீட்டைத் தொட்டபோது சுற்றுப்புறம் இருட்டத் துவங்கியது.

ஹாலில் காத்திருந்தான் மகேஷ்!

''ஸாரிங்க... ஆறு மணிக்கு வர்றதாச் சொன்னேன்... முக்கால் மணி நேரம் லேட் ஆயிடுச்சு...''

''எப்பவும் பத்து மணிக்குத்தானே

வருவே... மூணு மணி நேரம் முன்னா வந்துட்டேன்னு நான் சந்தோஷப் பட்டுட்டு போறேன்...''

''இவ்வளவு நேரம் பொறுமைய இருந்தீங்க... இன்னும் அரை மணி நேர பொறுத்துக்குங்க... போஸ்ட் மார்ட்ட அறையிலிருந்து நேரா வர்றேன். குளிச்சிட்டு வந்துடறேன்...''

''என்னோட பொறுமையை ரொம்பவே சோதிக்கறே...''

''கோபிச்சுக்காதீங்க ப்ளீஸ்... இதோ இப்போ வந்துடறேன்...''

வாரப் பத்திரிகையை எடுத்து வைத்து கொண்டு படுக்கையில் சாய்ந்து உட்கார்ந் தான் மகேஷ்.

ப்ரதீபா பாத்ரூமுக்குள் நுழைந்து உடைகளைக் களைந்து ஷவரைத் திருகினாள். பூந்துவாலையாய் விழுந்த நீரில் நனைந்து விட்டு டவலைச் சுற்றிக் கொண்டு குளியல் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அவள் மேக்சிக்கு மாறுவதற்குள் மகேஷ் ஓடி வந்து கட்டிப் பிடித்தான்.

ப்ரதீபா திமிறினாள்.

''இருங்க மேக்சியை மாட்டிக்கறேன்...''

''ஊஹூம்... நான் நல்ல மூடில் இருக்கறப்போ நீ கைக்கு கிடைச்சதே பெரிசு...''

நெளிந்த ப்ரதீபாவை ஒரு பூவைப் போல அள்ளி மெத்தையின் மேல் போட்டான். இறுக்கி அணைத்துக் கொண்டு மூக்கால் புறங்கழுத்தைத் தேய்த்தவன் - சட்டென பின் வாங்கினான். முகம் அஷ்ட கோணலுக்குப் போயிற்று. ப்ரதீபா அவனைப் பார்த்தாள்.



''என்னங்க... என்னாச்சு...?''

''என்ன இது... உன்கிட்டே இருந்து எலி செத்த மாதிரியான வாசனை வருது...?''

அவள் புன்னகையோடு சொன்னாள்.

''மார்ச்சுவரி உபயம்! ரொம்ப டீ-கம்போஸ்ட் ஆன 'பாடி...! போஸ்ட் மார்ட்டம் பண்ணி முடியற வரைக்கும் கூடவே இருந்தேன்... எவ்வளவு குளிச்சாலும் ரெண்டு மூணு மணிநேரத்துக்கு ஸ்மெல் போகாது...''

''இப்படி ஒரு பொழப்பு தேவையா... ப்ரதீபா...?''

வெறுப்பாய் வாஷ்பேசினில் உமிழ்ந்து விட்டு சட்டையை மாட்டிக் கொண்டு கோபமாய் வெளியேறினான் மகேஷ்.

## 13

டி.வி. பெட்டியின் எதிரே உட்கார்ந்திருந்தாள் ப்ரதீபா.

ரிமோட்டின் உதவியால் சேனலை ஃபைன் ட்யூன் பண்ணிக் கொண்டு இருந்தபோது - லில்லி ஓடி வந்த பொத்தென்று மடியில் ஏறி உட்கார்ந்தாள்.

''மம்மி...''

''சை...! ஏண்டி இப்படி எருமை மாடு மாதிரி மேல வந்து விழறே...?''

கோபமாய் ப்ரதீபா பொரிய - லில்லியின் சின்ன முகம் மேலும் சின்னதாய் சுருங்கிப் போனது.

''இன்னிக்கு உன்னோட ப்ரொக்ராம் டி.வி.யில வருமாம்... என்னோட ப்ரெண்ட்ஸெல்லாம் சொன்னாங்க... அதான் வந்து

உக்காந்தேன்...''

''இந்தக் கொஞ்சல் எல்லாம் என்கிட்டே வேணாம்... மொதல்ல நீ ஹோம் ஒர்க்கை முடிச்சியா...?''

''முடிச்சிட்டேன்...''

''மேத்ஸ்... சயன்ஸ்... தமிழ்...?''

''எல்லாமே முடிச்சிட்டேன்...''

''அப்படின்னா ஒழுங்கா நேரம் காலத்தில் படுத்துத் தூங்கி காலையிலே சீக்கிரமா எந்திரி...''

''உன்கிட்டேதான் படுத்துப்பேன்...''

''சொன்ன பேச்சைக் கேட்டுப் பழகு...! இல்லேன்னா கன்னம் கன்னமா அறைஞ்சிடுவேன்... எப்பவும் உங்கப்பாகிட்டே தானே படுத்துத் தூங்குவே... இன்னிக்கு என்ன புதுசா...? அவர் டி.வி. பார்க்க மாட்டார்... இந்நேரம் வயித்துக்குள் ஸ்டீம் எஞ்சின் உஷ்ணத்தோட படுத்திருப்பார்... போய் அந்த மனுஷன் கிட்டே படுத்துத் தூங்கு. போ...''

லில்லி லேசாய் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி எழுந்து சென்றாள்.

ப்ரதீபா டி.வி.க்குத் திரும்பி - ரிமோட்டின் உதவியால் வால்யூமைக் கூட்டினாள்.

திரையில் பச்சைக் கோடுகள் அதிகரித்தன.

சோப்பு விளம்பரப் பெண்ணின் குரல் கிடார் பின்னணியோடு சட்டென உயர்ந்தது.

பத்து நிமிஷங்களுக்கும் மேல் விளம்பரங்களாய் ஓடி முடித்து - நிகழ்ச்சி ஆரம்பமானது.

எழுத்துக்கள் சுழன்று சுழன்று திரைப் பரப்புக்கு வந்தன.

அவளைப் பேட்டி கண்ட நிருபர் - பாஸ்



போர்ட்சைசுக்கு திரையில் தோன்றினார்.

''இந்த வாரம் நாம் சந்திக்க இருக்கும் வி.ஐ.பி... பிரச்னைக்குரிய பெண் போலீஸ் அதிகாரி... திருமதி ப்ரதீபா ஐ.பி.எஸ்...!''

காமிரா பின்வாங்கி - சோபாவில் உட்கார்ந்திருந்த ப்ரதீபாவையும் நிருபரையும் ஒன்றாய்க் காட்டியது. நிருபரின் கேள்வி ஸ்பீக்கரில் வழிய ஆரம்பித்த நிமிஷம் -

திரையில் சட்டென உருவங்கள் அழிந்தன.

என்னாயிற்று...?

ப்ரதீபா இருக்கையை விட்டு எழுந்தாள்.

ரிமோட்டை அழுத்தி சானல்களை மாற்றிப் பார்த்தாள்.

எல்லா சானல்களுமே மவுனம் சாதித்தன.

பின்னையும், சாக்கெட்டையும் அசைத்துப் பார்த்தாள்.

அதே விநாடி - அவள் காதுகள் உன்னிப்பாயின.

மாடி மேலே இருந்து சப்தம்.

சட்டென்று வெளியே வந்து - மாடிப்படி இருட்டில் மேலே போனாள். தெரு விளக்கின் வெளிச்சம் மொட்டை மாடியில் விழுந்து கொண்டிருக்க -

மாடிப்படியின் பேராபட் சுவரில் -

மகேஷ் நின்றிருந்தான். கையில் கட்டிங் ப்ளேயர். கேபிள் வயரைத் துண்டாக்கியிருந்தான்.

ப்ரதீபா அடி வயிற்றிலிருந்து குரல் எழுப்பினாள். ''ஏன் இப்படி அநியாயம் பண்றீங்க...?''

''என்னோட இஷ்டத்துக்கு நான் எதை வேணும்ன்னாலும் செய்வேன்'' சொன்ன மகேஷ் பாறை மாதிரி முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு அலட்சியமாய்க் கீழே இறங்கிச் சென்றான்.

வெள்ளை நிற ட்ராக்ஸ் ஜீப் புயல் மாதி வந்து நிற்க - உள்ளேயிருந்து தடித்தடியா நாலைந்து பேர் இறங்கினார்கள்.

சாத்தியிருந்த காம்பவுண்ட் கதவை தள்ள- உயிருள்ள ஜந்து மாதிரி அ அலறியது. உள்ளே போய் போர்டிகோ ப ஏறி -

காலிங்பெல்லை அழுத்தினான் - ஒருவன்

நிமிஷ நேரத்துக்குப் பின் மகேஷ் கதவைத் திறக்க - அவனுடைய அனுமதி கேட்காமலே தடதடவென உள்ளே நுழைந்தார்கள்.

லில்லி அவர்களைப் பார்த்துப் பயந்து போய்ப் பக்கத்து அறையில் ஒண்டிக் கொண்டு எட்டிப் பார்த்தாள்.

மகேஷ் படபடத்தான்.

''யார் நீங்க...? என்ன வேணும் உங்களுக்கு...?''

''போலீஸ்காரம்மா எங்கே...?''

''இன்னும் வரலை...''

அவர்கள் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

பெரிய மீசை வைத்திருந்தவன் சொன்னான்.

''அந்தம்மா இல்லைன்னா என்ன இப்போ...! நாம வந்த விஷயத்தை இவர்கிட்டேயே சொல்லிடுவோம்...''

மற்றவர்கள் தலையாட்ட மீசைக்காரன் மகேஷை ஏறிட்டான்.

''இங்கே பாருங்க ஸார்... அந்த ட்ராக்ஸ் ஜீப்புக்குள்ளே எட்டிப் பார்த்தீங்கன்னா உருட்டுக் கட்டை, சைக்கிள் செயின்ல இருந்து கத்தி வீச்சரிவாள் வரைக்கும் எல்லா



விதமான சங்கதிகளும் இருக்கு... எங்களுக்கு இப்படி சோபால உக்காந்து வெட்டிப் பேச்சு பேசவே தெரியாது... எடுத்த எடுப்புல கைதான் பேசும்...!''

மகேஷ் எச்சிலை விழுங்கிக் கொண்டு - கேட்டான்.

''உங்களுக்கு என்ன வேணும் இப்போ?''

''உங்க வீட்டுக்காரம்மா செய்யற காரியங்களெல்லாம் , எங்களை வெறுப்பேத்தற மாதிரி இருக்கு... அநாவசியமான பிரச்னைகளிலெல்லாம் மூக்கை நுழைக்கறாங்க...''

மகேஷ் அமைதியாய் அவர்களைப் பார்க்க -

அவர்களின் வார்த்தைகள் தொடர்ந்தன.

''எலெக்ஷன் நடக்கற டயத்தில்... நாங்க நிம்மதியா தேர்தல் வேலை செய்ய முடியறதில்லை... ஆ ஊன்னா சட்டத்தைக் காட்டி மிரட்டறாங்க... அவங்களை ஜாக்கிரதையா இருந்துக்கச் சொல்லுங்க... அடுத்த முறை நாங்க இங்கே வர்ற அளவுக்கு வெச்சிக்க வேண்டாம்ன்னு சொல்லுங்க... அப்படி ஒரு வேளை வந்தோம்ன்னா நாங்க இது மாதிரி வட்டமேசை மாநாடு நடத்திட்டிருக்க மாட்டோம்... அவ்வளவுதான் இப்போ சொல்ல முடியும்... டேய்... வாங்கடா போகலாம்...''

மகேஷ் மெதுவாய்க் கேட்டான்.

''நீங்க எல்லாரும் யாரு...?''

''அதெல்லாம் எதுக்கு...? அரசியல் கட்சி விவகாரங்களில் அம்மாவை தலையிடாம இருந்துக்கச் சொல்லுங்க...''

செருப்புகள் தேய - தட தடப்பாய் ஜீப்பை நோக்கிச் சென்றார்கள். ஒவ்வொருவராய்

ஜீப்பில் தொற்றிக்கொள்ள - அந்தப் பிராந்தியமே அதிர ஆக்ஸிலேட்டரை அழுத்திக் கொண்டு பறத்தினார்கள்.

அவர்கள் போய்ப் பத்தாவது நிமிஷம் - ப்ரதீபா களைப்பாய் உள்ளே வந்தாள். மகேஷ் அவளை கேலியாய்ப் பார்த்தான்.

''நல்லவேளை லேட்டா வந்தே... கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா ரத்தக் கறைதான்...''

''ஏன்... என்ன விஷயம்...?''

''கட்சிக்காரங்களோடு தகராறு செஞ்சியா...?''

''அப்பாவி ஜனங்கிட்டே பணமும், நகையும் குடுத்து ஓட்டை விலை குடுத்து வாங்க முயற்சி நடந்தது... நான் கையும் களவுமா பிடிச்சிட்டேன்... எலக்ஷன் கமிஷனர்க்கும் தகவல் தந்துட்டேன்...''

''உனக்கு எதுக்கு இந்த வேலை...?''

''பொறுப்பான போலீஸ் அதிகாரியா இருக்கற நான் செய்யாம இந்த வேலையை வேற யார் செய்வா...?''

''ஜீப்புல தடித்தடியா நாலைஞ்சு பேர் வந்து கொன்னுடுவேன்னு மிரட்டிட்டுப் போறாங்க...''

ப்ரதீபா நிமிர்ந்தாள்.

''அவங்க யார்ன்னு சொல்லுங்க...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது... மொத்தமா மிரட்டிட்டுப் போனாங்க...''

''யாருன்னுகூட சொல்லிக்காம போன பேடிப் பசங்களைப் பார்த்து நீங்க பயந்துட்டீங்களா...? வந்தவங்க ட்ராக்ஸ் ஜீப்பிலா வந்தாங்க...?''

''ஆமா...''

''ஒயிட் கலர்...?''



''ஆமா...''

''அவங்க பச்சையப்பனோட ஆட்களாத்தான் இருக்கும்... பணத்துக்காக குரைக்கிற அந்த நாய்களைப் புடிச்சு உள்ளே தள்ளினா சரியாப் போயிடும்...''

''விளையாடறியா...? ஜீப் நிறைய ஆயுதங்கள் வெச்சிருந்தாங்க... இனிமே வந்தாங்கன்னா அவங்க வாய் பேசாதாம்... கைதான் பேசுமாம்...''

''அதெல்லாம் வெத்து மிரட்டல். கண்ட்ரோலுக்கு இப்போ தகவல் கொடுத்தாக்கூட போதும். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே இங்கே வந்தவங்க அத்தனை பேரும் லாக்கப்புக்குள்ளே இருப்பாங்க...''

மகேஷ் கோபத்தோடு படபடத்தான்...

''உன்னை மாதிரி பொண்ணுங்களுக்கு இந்த மாதிரி அடிதடி உத்யோகம் தேவைதானா...?''

''அதான் விவாகரத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டீங்களே...?''

''உன்னை இந்த வீட்ல வெச்சிருந்தா எங்களுக்குத்தான் பிரச்னை... நீ இனிமே இங்கே இருக்க வேண்டாம்... ஏதாவது ஒரு லேடீஸ் ஹாஸ்டல் பார்த்துப் போயிரு...''

அதிர்ந்து போய் ப்ரதீபா நிமிர்ந்தாள்.

மகேஷ் தொடர்ந்தான்.

''அவங்க தடதடன்னு உள்ளே வந்ததும் லில்லி அரண்டு போயிட்டா... உன் மேல இருக்கற ஆத்திரத்தில் அந்த மாதிரி ஆட்கள் என்னையோ, லில்லியையோ ஏதாவது பண்ணிட்டா... என்ன செய்ய முடியும்...? உனக்கு வேணா உன்னோட உயிரைப் பத்திக் கவலையில்லாம இருக்கலாம்... எங்களுக்கு

அப்படி இல்லை...''

ப்ரதீபா தீர்க்கமாய் தலையாட்டினாள்.

''இந்த வீட்டை விட்டு நான் போகமாட்டேன்... கோர்ட் பார்த்து விவாகரத்து தீர்ப்பு வழங்கற வரைக்கும் நான் இந்த வீட்டில்... உங்களோடதான் இருப்பேன்... இப்பவே என்னை வீட்டை விட்டு விரட்டிடலாம்ன்னு நீங்க நினைச்சா அது நடக்காது. அந்த ரௌடிங்களால உங்க ரெண்டு பேரோட உயிர்க்கும் ஆபத்து ஏற்படாம பார்த்துக்க வேண்டியது என்னோட பொறுப்பு. போதுமா?''

## 14

கான்ஸ்டபிள் மேஜைக்கருகே விறைப்பாய் வந்து நின்று சல்யூட் கொடுக்க -

போனில் பேசிக் கொண்டிருந்த ப்ரதீபா ரிசீவரை அதனிடத்தில் வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

''என்ன... சார்லி...?''

''மேடம்... சி.எம். ஆபீசிலிருந்து உங்களுக்கு கால் வந்திருக்கு...''

''முதலமைச்சர் ஆபீஸிலிருந்தா...?''

''எஸ் மேடம்... உங்களை உடனே புறப்பட்டு வரச்சொன்னாங்க...''

''என்ன விஷயமா...?''

''தெரியலை மேடம்...''

''நம்ம கன்ட்ரோல் ஏரியாவில் சட்டம் ஒழுங்கு நிலைமை நார்மலாத்தானே இருக்கு...?''

''நார்மல்தான் மேடம்...''

''சிபி சிஐடியின் லேட்டஸ்ட் ரிப்போர்ட்



ஃபைலை ஜீப்புக்கு கொடுத்து அனுப்புங்க...''

சொல்லிவிட்டு - வேகமாய் நடந்தாள்.

வாசலில் நின்றிருந்த ஜீப்பில் தாவினாள். ஃபைல் வந்து சேர - ஜீப் சாலையைத் தேய்க்க ஆரம்பித்தது.

'முதல்வர் எதற்காகக் கூப்பிட்டிருப்பார்...?'

யோசனையோடு பத்து நிமிஷப் பயணம் முடிந்திருக்க - கோட்டை வாசலில் ஜீப் நுழைந்தது.

அலுவலக வராந்தாவில் காத்திருந்து - அவரிடமிருந்து அழைப்பு வந்ததும் உள்ளே போனாள்.

தலை பூராவும் பஞ்சாய் நரைத்திருக்க - அந்த அறுபது வயதுப் பெண் முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

ப்ரதீபா மரியாதை நிமித்தமாய் சல்யூட் தர - புன்னகையோடு கைகளைக் குவித்தார் முதல்வர். பதவியேற்ற பத்தே மாதத்தில் அத்தனை தரப்பிலும் நல்ல பேரை சம்பாதித்து இருந்தார்.

''நீங்க கூப்பிட்டனுப்பினதா ஆபீசுக்கு மெசேஜ் வந்தது... மேடம்.''

முதல்வர் தலையசைத்தார்.

''எஸ்... இன்னிக்கே உன்னை அந்த செக்ஷனிலிருந்து ரிலீஸ் பண்ண ஏற்பாடு பண்ணியிருக்கேன்...''

''ரிலீஸ் பண்றீங்களா...?''

''ஆமா...''

''எ... எதுக்காக மேடம்...?''

''உனக்கு இனிமே என்கிட்டேதான் ட்யூட்டி...''

''பு... புரியலை மேடம்...''

''உன்னோட ட்ராக் ரெக்கார்ட்ை பார்த்தேன்... உன்னோட துணிச்சல், நேர்ை எல்லாம் எனக்கு ரொம்பப் பிடிச்சது. உன்னைப் போல ஒருத்தர்தான் எனக் பாதுகாப்பு அதிகாரியா இருக்கணும்ன்னு முடிவு பண்ணினேன்... ஸோ. நாளையிலிருந்து என்னோட செக்யூரிட்ட விங்குக்கு நீதான் தலைமை அதிகாரி.. சாயந்தரம் முறைப்படி ஆர்டர் வரும்...''

சந்தோஷத்தில் வியர்த்தாள் ப்ரதீபா.

டெலிபோன் வீறிட்டது.

ரிசீவரை எடுத்த மகேஷ் - மறுமுனைக் குரலைக் காதில் வாங்கிவிட்டு ப்ரதீபாவிடம் நீட்டினான்.

''உனக்குத்தான் போன்...''

அவள் அதைக் கையில் வாங்கி, ''ஹலோ...'' என்றாள்.

''டி.ஜி.பி. ஆபீஸிலிருந்து ராமானுஜம் பேசறேன்...''

''சொல்லுங்க ஸார்...''

''வாழ்த்துக்கள்ம்மா... உயர்ந்த பதவி உனக்குக் கிடைச்சிருக்கு... உன்னோட உழைப்புக்குக் கிடைச்ச பரிசு இது...''

''தாங்க்யூ ஸார்...''

''எப்போ ஜாயின் பண்ணறே...?''

''நாளைக்கு...''

''உனக்குக் கிடைச்சிருக்கிற இந்த உயர்ந்த பதவியையும் தனித் தன்மையோட வகிப்பேன்னு நினைக்கறேன்...''

''நிச்சயமா ஸார்...''

போனைச் சாத்தினாள்.

நகர முற்படுவதற்குள் மறுபடியும்



கூப்பிட்டது.

காலையிலிருந்தே தொடர்ந்து கால்கள்.

''ஹலோ... ப்ரதீபா ஹியர்...''

''நான் கிரிஜா...''

''சொல்லு...''

''கங்கிராட்ஸ்... பேப்பர்ல பார்த்தேன்...''

''தாங்க்யூ...''

''நல்லா இருக்கியா...?''

''ம்...''

''லில்லி...?''

''நல்லா இருக்கா...''

''உன்னோட வீட்டுக்காரர்...?''

ஓரிரு விநாடி தயக்கத்துக்குப் பின் -

''ம்...'' என்றாள்.

''இப்போ... டிபார்ட்மென்ட்டில் அந்தஸ்தான பதவிக்கு வந்திருக்கே... மகேஷ் மனசு மாறியிருக்காரா...?''

''இல்லை... எனக்குப் புகழ் அதிகமாக அதிகமாக - பதவிகள் உயர உயர அவர் என்னை விட்டு அதிகமா விலகி விலகிப் போறார்.''

''இன்னொரு தடவை நான் அவரோட பேசிப் பார்க்கட்டுமா...?''

''பிரயோஜனமில்லை... இன்னிக்குக்கூட கோர்ட்டுக்குப் போறோம்... லாஸ்ட் ஹியரிங்...''

''எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு...''

''வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்... சில விஷயங்கள் நடப்பதை நாம தடுக்க முடியாது...!''

''நீ ஆயிரம் சொன்னாலும் எனக்கு மனசு கேக்கலை...!'

''கோர்ட்டுக்கு நேரமாச்சு... போனை வெச்சுரட்டுமா...?''

கேட்டுவிட்டு ரிசீவரைச் சாத்தினாள்.

மகேஷ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''யார் கூட பேசினே...?''

''கிரிஜா... நாம விவாகரத்து பண்ணிக்கறதை நினைச்சா அவளுக்கு ரொம்ப கஷ்டமா இருக்காம்... உங்ககிட்டே ஒரு முறை பேசிப் பார்க்கட்டுமான்னு கேட்டா...! பேசிப் புண்ணியமில்லை... உபயோகமா வேற ஏதாவது செய்ன்னு நான் சொன்னேன். சரிதானே...?''

அவன் ஒன்றும் பேசவில்லை.

வாட்சைப் பார்த்தான்.

''கோர்ட்டுக்கு நேரமாச்சு இல்லையா...? இன்னிக்கு லாஸ்ட் ஹியரிங். இதைக் கேட்டுட்டு தீர்ப்பு சொல்லுவாங்க... தீர்ப்பு வர்ற வரைக்கும் நாம ஒரே காரில் போறதில் தப்பில்லையே... வாங்க போலாம்...''

ப்ரிமியரில் ஏறினார்கள்.

கார் கோர்ட்டை நோக்கி விரைந்தது.

## 15

**கா**லை எட்டு மணி.

காக்கி யூனிபார்மை மாட்டியிருந்த ப்ரதீபா படுக்கையிலிருக்கும் மகேஷிடம் காபி கோப்பையை நீட்டினாள்.

''குட்மார்னிங்...''

அவன் எழுந்து கண்களைக் கசக்கினான்.

புன்னகைத்தாள் ப்ரதீபா.

''இன்னிக்குத்தான் அநேகமா நான் சொல்ற கடைசி குட்மார்னிங்ன்னு நினைக்கறேன். சாயங்காலம் கோர்ட்ல தீர்ப்பு வந்துடும்...''

மகேஷ் காபி கோப்பையை வாங்கிக்



கொண்டு ஒன்றும் பேசாமல் அவளையே பார்க்க -

ப்ரதீபா புன்னகையை இழக்காமல் தொடர்ந்து கேட்டாள்.

''ஏன் ஒண்ணும் பேசாம உர்ன்னு இருக்கீங்க... சந்தோஷமா இணைஞ்சோம்... சந்தோஷமாவே பிரிவோமே...! லாயர் சற்குணம் சொன்னார்... லில்லியை நீங்க வளர்க்கணும்ன்னுதான் தீர்ப்பு வருமாம்... ஏன்னா நான் போலீஸ்காரி... நேரம் கெட்ட நேரத்திலே அவசர வேலைகள் வரும்... அவ்வளவு அக்கறையா நான் அவளைப் பார்த்துக்க முடியாதுங்கறது அவர் வாதம்...''

''தீர்ப்பு வரட்டும்...'' என்றான் மகேஷ்.

''பரீட்சை எழுதினவனுக்குத் தான் பாஸா பெயிலான்னு ஏற்கெனவே தெரிஞ்சிருக்கும்... ரிசல்ட் பார்க்கறதெல்லாம் வெறும் சம்பிரதாயம்... அது மாதிரி இப்பவே என்னால சொல்ல முடியும்... நாம பிரியறது உறுதியாயிடுச்சு... லில்லியை நீங்க வளர்க்கறதும் உறுதி ஆயிடுச்சு... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்...! அப்பப்போ நான் லில்லியைப் பார்க்க வந்தேன்னா... முகம் சுளிக்காம என்னை வீட்டுக்குள்ளே அலவ் பண்ணுங்க...''

சொல்லிவிட்டு - படுக்கையறையை விட்டு வெளியேறினாள். மகேஷ் நிதானமாய் காபியை குடிக்க ஆரம்பித்து - காலியான கோப்பையைக் கீழே வைத்த விநாடி -

''டாடி...''

முன் ஹாலிலிருந்து லில்லியின் அலறல்.

அடிவயிற்றை உலுக்கிப் போடுகிற மாதிரி இருந்தது அந்த அலறல்.

''டாடி...! இங்கே வந்து பாருங்க டாடி...''

போர்வையை விலக்கி விட்டு மகேஷ்

வேகமாய் ஹாலுக்குப் போனான்.

திடுக்கிட்டான்.

டீபாய்க்கு அருகே -

கீழே கோணலாய் விழுந்து கிடந்தாள் ப்ரதீபா.

லில்லி அழுது கொண்டே சொன்னாள்.

''மம்மி... திடீர்னு கீழே விழுந்துட்டாங்க... டாடி.''

மகேஷின் உடம்பு பூராவும் பதட்ட ரத்தம் பாய - ப்ரதீபாவை அள்ளி எடுத்துக்கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கி வந்தான் மகேஷ்.

லில்லி அழுது கொண்டே பின் தொடர்ந்தாள்.

குடும்ப டாக்டர் விஸ்வத்துக்கு எதிரே இருட்டடித்த முகத்தோடு உட்கார்ந்திருந்தான் மகேஷ்.

''டாக்டர்...! ப்ரதீபாவுக்கு என்னாச்சு...? ஏன் திடீர்னு மயக்கமாகி விழுந்தா...?''

டாக்டர் விஸ்வம் கண்ணாடி அணிந்த தன் கண்களில் கனிசமான கவலையைக் காட்டினார்.

''மிஸ்டர் மகேஷ்...! கடந்த ஒரு வருஷமாவே உங்களுக்கு மட்டுமில்லை... யார்க்குமே தெரியாமே இருந்த உண்மையை இப்போ உங்ககிட்ட சொல்ல வேண்டியிருக்கு...''

மகேஷ் முகம் மாறினான்.

''உண்மையா...? என்ன உண்மை டாக்டர்?''

''சில வருஷங்களுக்கு முன்னால ஒரு கள்ளச் சாராயக் கும்பலை மடக்கிப் பிடிக்கும்போது ப்ரதீபா தலையில பாறையோட முனை மோதி அடிபட்டிருக்கு. அந்த இம்பேக்ட் மூளையின் மடிப்புப் பகுதியில் இருக்கும் நுண்ணிய நரம்புகளைப்



பாதிச்சிருக்கு. இந்த பாதிப்பு திடீர்னு ரத்த ஓட்டத்தை டிஸ்டர்ப் பண்ணும். இதன் காரணமா மூளைக்குள் ரத்தம் உறையும். அப்படி ரத்தம் உறையும்போது ப்ரதீபா கீழே விழுந்து மயக்கமாயிடுவாங்க. இந்த நரம்பு பாதிப்புக்காக ரெண்டு வருஷமா என்கிட்டே ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டிருக்காங்க ப்ரதீபா...''

மகேஷின் முகப்பிரதேசம் பூராவும் அதிர்ச்சி.

''டாக்டர்! இதைக் குணப்படுத்த முடியாதா?''

''ஆபரேஷன் மூலம் இதை சரிபண்ண நரம்பியல் டாக்டர்ஸ் பலபேர் கிட்ட கன்ஸல்ட் பண்ணிப் பார்த்துட்டேன். எல்லாருமே ஒட்டுமொத்தமா உதட்டைப் பிதுக்கிட்டாங்க.''

''ஏன்...?''

''ஆபரேஷன் பண்ணினா அதனோட சக்ஸஸ் ரேட் இருபது பர்செண்ட்தான். இது ரிஸ்க். ப்ரதீபாவின் மூளைப் பகுதிக்குள் கத்தியோ லேசரோ நுழைய முடியாத அளவுக்கு சிக்கலான இடம். மாத்திரைகளால் நாட்களைத் தள்ளிட்டு போகணுமே தவிர ஆபரேஷன் சாத்தியம் கிடையாதுன்னு எல்லா டாக்டர்ஸும் சொல்லிட்டாங்க...''

''டாக்டர்! ப்ரதீபாவை வெளிநாட்டுக்கு கொண்டு போய்... அங்கே ட்ரீட்மெண்ட் எடுக்க முடியாதா...?''

''வெளிநாட்டு டாக்டர்களையும் கன்சல்ட் பண்ணிப் பார்த்துட்டேன். யாருமே பாசிடீவான ரிப்ளை தரலை...''

மகேஷ் நெற்றியைப் பிடித்தபடி சில விநாடிகளுக்கு மௌனமாய் இருக்க - டாக்டர் தொடர்ந்தார்.

''மகேஷ்...! ப்ரதீபா உயிர் வாழப்போறது இரண்டு மூணு வருஷங்கள்தான்னு எனக்குத் தெரிஞ்ச உண்மையை ரொம்ப நாள் கழிச்சு அவங்க தெரிஞ்சுகிட்டாங்க. அந்த நிமிஷத்திலிருந்தே குழந்தை லில்லி மேல பாசத்தைக் காட்டறதை நிறுத்திட்டாங்க. தன்னோட மரணத்துக்குப் பின்னாடி லில்லி மனசு உடைஞ்சு போயிடக்கூடாதேங்கிற காரணம்தான். அதேபோல் உங்களுக்கும் அவங்க மேல வெறுப்பு வரணும்ங்கிறதுக்காக போலீஸ் வேலையில் தீவிரமா ஈடுபட்டாங்க. தன்னோட உயிர் பிரியறதுக்கு முந்தி போலீஸ் உத்யோகத்தை வெச்சு எந்த அளவுக்கு சமூகத்துக்காக உழைக்கணுமோ அந்த அளவுக்கு உழைச்சுட்டாங்க. மூணு மாசத்துக்கு முந்தி ஒரு தடவை ப்ரதீபாவுக்கு இதே. மாதிரி மயக்கம் வந்தது. அது ரொம்பவும் சீரியஸான நிலைமை. அடுத்த முறை மயக்கம் வந்தா உயிர் பிழைக்கிறது கஷ்டம்ன்னு எனக்கு தீர்மானமா தெரிஞ்சிடுச்சு...''

''டா... டாக்டர்... அப்போ... ப்ரதீபா...?''

''ஸாரி... மிஸ்டர் மகேஷ்... அவங்க உயிரோடு இருக்கப் போறது சில மணி நேரங்கள்தான். மயக்கம் தெளியும்போது ரெண்டொரு வார்த்தை அவங்களால பேச முடியும்... அவ்வளவுதான்...''

மகேஷ் உறைந்து போனான்.

## 16

சரியாய் நான்கு மணி நேரம் கழித்து - ப்ரதீபாவுக்கு நினைவு திரும்பியது.



லில்லி தலைமாட்டில் நின்று கொண்டு 'மம்மி மம்மி' என்று விசும்பிக் கொண்டிருக்க - மகேஷ் ப்ரதீபாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவளுடைய தலையை வருடினான்.

''ப்... ப்ரதீபா...''

ப்ரதீபாவின் கண்கள் சிரமமாய் பிளந்து மகேஷை அரை பார்வை பார்த்தது.

வறண்ட உதட்டில் ஒரு புன்னகை கீற்று உதித்தது.

''எ... என்னங்க...?''

''ப்... ப்ரதீபா...''

''கோ... கோர்ட்ல... தீ... தீ... தீர்ப்பு... என்ன... என்ன... சொ... சொன்னாங்க...?''

''ப்ரதீபா... அதைப் பத்தியெல்லாம் நினைக்காதே.''

''ஆ... இல்லீங்க... கோ... கோர்ட் தீர்ப்புக்கு... அ... அவசியம்... இல்லாதபடி.... அ... அதுக்கு... முந்தியே...''

ப்ரதீபா சில விநாடிகள் மூச்சிரைத்துவிட்டு தொடர்ந்தாள்.

''அ... அதுக்கு முந்தியே... கடவுளோட.... தீர்ப்பு... வ... வந்துடும்ன்னு நி... நினைக்கிறேன்... விவாகரத்து... இல்லாமே நாம... நாம பிரியப் போறோம்...''

''ப்... ப்ரதீபா...''

மகேஷின் கண்களில் நீர் தெறித்தது.

''உன்னோட உணர்வுகளைப் புரிஞ்சுக்காமே நான் உன்கிட்ட ஒரு காட்டு மிராண்டி மாதிரி நடந்துக்கிட்டேன். நீ பார்த்த போலீஸ் உத்யோகத்தை கேவலமா பேசினேன்... என்னை மன்னிச்சிடு ப்ரதீபா.''

ப்ரதீபா தன் கைகளை சிரமமாய் உயர்த்தி - கணவனின் கைகளைப் பற்றிக் கொண்டு கஷ்ட புன்னகைப் பூத்தாள்.

''எ... என்னங்க...''

''சொல்லு ப்ரதீபா...''

''எ... எனக்கு... ஒரு ஆசை...''

''சொல்லு'' - படபடத்தான்.

''சொ... சொன்னா... உங்களுக்கு கோபம் வராதே...?''

''நீ என்ன சொன்னாலும் கோபம் வரா சொல்லு.''

ப்ரதீபா தன் உதட்டை ஈரமாக்கி கொண்டாள்.

''ந... ந... நம்ம லில்லியை...?''

''லில்லியை...?''

''ஐ.பி.எஸ். படிக்க வெச்சு என்ன மாதிரியே போலீஸ் உத்யோகம் பார்க் வைக்கணும்...''

மகேஷ் கன்னங்களில் நீரோ புன்னகைத்தான்.

''நிச்சயம்! உன்னோட ஆசைை நிறைவேத்தி வைப்பேன் ப்ரதீபா...''

ப்ரதீபாவின் கண்களில் பிரகாசம் தெரிந்த

''நி... நிஜமா...?''

''சத்தியமா...''

''லில்லி ஐ.பி.எஸ்...'' என் சந்தோஷமாய் முணுமுணுத்த ப்ரதீபாவி உதடுகள் சட்டென்று அசைவை நிறுத்தி கொள்ள கண்கள் நிலைத்துப் போயிற்று.

மகேஷின் அழுகை படிப்படியா அதிகரிக்க -

அந்த காக்கி ரோஜாவின் மேல் -

வெள்ளை விரிப்பு போர்த்தப்பட்டது.

**முற்றும்.**